# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

கொள்கை விளக்கக் குறிப்பு

2023 - 2024

மானியக் கோரிக்கை எண்.7

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**

**மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**

**கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர்**

©

தமிழ்நாடு அரசு

2023

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | மீன்வளக் கொள்கை | 3 |
| 3 | நிருவாக அமைப்பு | 9 |
| 4 | தமிழ்நாட்டின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம் | 13 |
| 5 | கடல் மீன்வள செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் | 22 |
| 6 | உள்நாட்டு மீன்வள மேம்பாடு | 58 |
| 7 | மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 88 |
| 8 | மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்துதல் | 118 |
| 9 | பயிற்சி மற்றும் நிதியுதவி சேவைகள் | 122 |
| 10 | விரிவாக்கம் மற்றும் இதர நடவடிக்கைகள் | 124 |
| 11 | மீனவ கூட்டுறவு சங்கங்கள் | 127 |
| 12 | நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் | 129 |
| 13 | தமிழ்நாடு மீனவர் நல வாரியம் | 131 |
| 14 | தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் | 138 |
| 15 | தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் | 145 |
| 16 | தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் | 158 |
| 17 | எதிர்காலத் திட்டங்கள் | 175 |
| 18 | நிதி ஒதுக்கீடு (2023–2024) | 178 |
| 19 | நிறைவுரை | 179 |
| 20 | பிற்சேர்க்கை | 182 |

# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கொள்கை விளக்கக்குறிப்பு

# 2023–2024

## 1. முன்னுரை

தமிழ் நாட்டின் பல்வேறு மீன்வள ஆதாரங்களிலுள்ள வளமான மீன் பல்லுயிர் வளம், பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு நேரடியாகவும் மற்றும் அதனைச் சார்ந்த நடவடிக்கைகளிலும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குகிறது. 2021–22 ஆம் ஆண்டில், தமிழ் நாட்டின் மொத்த வேளாண் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியில், மீன்வளத்தின் பங்களிப்பு 5.78% ஆகும். மேலும், 2021–22 ஆம் ஆண்டில் 1.14 லட்சம் மெட்ரிக் டன் மீன் மற்றும் மீன் பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம், ரூ.6,559.64 கோடி அன்னியச் செலாவணி ஈட்டிடுவதற்கு, தமிழ் நாட்டின் மீன்வளம் பங்களிப்பு செய்துள்ளது.

மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனை உறுதி செய்வதற்கு அரசு மிகுந்த முக்கியத்துவத்தையும் அளிக்கிறது. மீன்பிடி தடைக்காலம் மற்றும் மீன்பிடிப்பு குறைவு காலங்களில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மூலம்

மீனவர்களின் சமூக பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதுடன், கடலில் மீனவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடையற்ற தகவல் தொடர்பு அமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் மீன்வளமானது கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும், இதுவரை முறையாக பயன்படுத்தப்படாத வளங்களை, முழுமையாக பயன்படுத்துவதற்கும், மீன் வளர்ப்பின் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மகத்தான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. பண்ணைக் குட்டைகள் உள்ளிட்ட குளங்கள் மற்றும் ஏரிகள் மழைநீரை சேகரித்து, சேமித்து வைப்பதன் மூலம், நிலத்தடி நீர் மட்டத்தினை காப்பதில் மிக முக்கிய பங்கு வகிப்பதுடன், உள்நாட்டு மீன் உற்பத்தியில் கணிசமாக பங்களிக்கின்றன. நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் மக்கள் தொகையின் காரணமாக, ஆரோக்கியமான மீன் புரத உணவிற்கான தேவை நீடித்த முறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக, மீன்வள ஆதாரங்களை முழுமையான அளவில் பயன்படுத்துவதற்கும் மற்றும் கூடுதல்

மீன்வள ஆதாரங்களை உருவாக்குவதற்கும் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

மீன்வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான முறையில் கடல் மீன் உற்பத்தியை அதிகரித்தல் ஆகியவற்றிற்காக அரசு பல்வேறு புதுமையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மீனவர்கள் தங்கள் மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும் மற்றும் மீன்களை சுகாதாரமாக கையாளுவதற்கும், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், கடற்கரையோர வசதிகள், மீன் சந்தைகள், குளிர்பதனக் கிடங்குகள், பனிக்கட்டி நிலையங்கள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. இந்த நோக்கத்தினை நிறைவேற்றிடும் பொருட்டு மேற்கூறிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட அரசு அதிக அளவிலான முதலீடுகளை செய்து வருகிறது.

## 2. மீன்வளக் கொள்கை

மீனவர் நலன், மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரின் வருவாயினை உயர்த்துதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு மீன்வளக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

## 2.1 தொலைநோக்குப் பார்வை

*"மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மூலம் மீன் உற்பத்தியினை பெருக்குதல் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை, பாதுகாப்பினை உறுதி செய்தல்".*

## 2.2 செயலாக்கம்

மாநிலத்தின் அனைத்து நீர்வளங்களை மேம்படுத்தி, மேலாண்மை செய்து, பாதுகாத்து, வளங்குன்றாமல் பயன்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வேலைவாய்ப்பினை அதிகரித்து, ஊட்டச்சத்துமிக்க உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

## 2.3 முக்கிய கொள்கைகள்

மீன்வளம் சார்ந்த அரசின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர்களின் நலன் பேணுதல்.

2. பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

3. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்வள ஆதாரங்களின் மூலம் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்.

4. மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல்.

5. அரசு மீன் பண்ணைகள், மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், தொடர் குளிர்காப்பு, மதிப்புக்கூட்டுதல் மற்றும் மீன்பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிக ரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

6. மீன்வளர்ப்பின் மூலம் ஊரகப்பகுதியில் கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

7. மீனவ மகளிருக்கு புதிய வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துவதன் மூலம் அதிகார பகிர்வளித்தல்.

8. வாழ்வாதாரம், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை வழங்குவதற்கு ஏதுவாக உள்நாட்டு மீன்

வளங்களை பாதுகாத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் நிலையாக பயன்படுத்துதல்.

9. மீன்குஞ்சு தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.

10. விலைமதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

11. உரிய சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன் வாயிலாக மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மீன்வளங்களை அதிகரித்தல் மற்றும் மேலாண்மை செய்தல்.

12. மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின் மூலம் மீன்வளத்தை மேம்படுத்துதல்.

13. தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை மறு மதிப்பீடு செய்தல்.

14. மின் ஆளுமை மூலம் வெளிப்படைத் தன்மையுடன் திட்டங்கள் சென்றடைவதை கண்காணித்து உறுதி செய்தல்.

## 2.4 துறையின் முக்கிய செயல்பாடுகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.
2. கடல் மீன்பிடிப்பின் போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.
3. இயற்கை பேரிடர் காலங்களில் தேடுதல், மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.
4. மீனவர்களுக்கான பல்வேறு சமூக நலத் திட்டங்களை செயல்படுத்துதல்.
5. மீன்வளச் சட்டங்கள் மற்றும் விதிகளை அமல்படுத்துதல்.
6. நீர்நிலைகளில் மீன் குஞ்சுகளை உற்பத்தி மற்றும் இருப்புச் செய்வதன் மூலம் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை பாதுகாத்து மேலாண்மை செய்தல்.

7. உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மூலம் மேம்படுத்துதல்.

8. மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள் மற்றும் அரசு மீன் பண்ணைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

9. சுகாதாரமான முறையில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் குளிர்காப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.

10. மீனவ மகளிருக்கென சிறப்பு மாற்று வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்துதல்.

11. மீனவர் மற்றும் மீன்வளர்ப்போருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்.

12. விரிவாக்கப் பணிகள் மூலம் திட்டங்களை சென்றடையச் செய்தல்.

13. மீனவ கூட்டுறவு சங்கங்களை மேலாண்மை செய்தல்.

14. மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் மீனவர்களின் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.


15. மீன் உற்பத்தியை அதிகரிக்க நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்.

16. மீனவர்களுக்கு வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் மற்றும் மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்குதல் போன்ற நலத்திட்டங்களை செயல்படுத்துதல்.

17. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்குதல்.

**3. நிருவாக அமைப்பு**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.


மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர் (2)
காவல் கண்காணிப்பாளர் (1)
நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் (1)
தலைமை பொறியாளர் (1)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (4) / மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (11) / துணை இயக்குநர் (பொறியியல்) (1) / துணை இயக்குநர் (பணியாளர்) (1 )
துணை காவல் கண்காணிப்பாளர் (1)
கணக்கு அலுவலர் (1)
செயற்பொறியாளர் (5)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் (49) / நேர்முக உதவியாளர் (12) / துணைப் பதிவாளர் (1)
உதவி செயற்பொறியாளர் (13)
உதவி பொறியாளர் (13) / இளநிலை பொறியாளர் (17)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வாளர் (167) / கூட்டுறவு சார்–பதிவாளர் (16)
காவல் ஆய்வாளர் (10) / காவல் சார்–ஆய்வாளர் (8)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்ஆய்வாளர் (84) / கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர் (27) / கடல்முதல்வர் (13)

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,796 ஆகும். பதவி வாரியாக பணியிடங்களின் விவரம் அட்டவணை –1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1**

**பதவி வாரியாக அலுவலர்கள் விவரம்**

| வ எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி) |
|---|---|---|
| 1 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் | 1 |
| 2 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் இயக்குநர் | 2 |
| 3 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் | 4+1 |
| 4 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் | 11+2 |
| 5 | துணை இயக்குநர் (பணியாளர்) | 1 |
| 6 | துணை இயக்குநர் (பொறியியல்) | 1 |
| 7 | நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் | 1 |
| 8 | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் / உதவி இயக்குநர் (இயந்திரவியல்) | 49+8 |
| 9. | துணை பதிவாளர் | 1 |
| 10 | கணக்கு அலுவலர் | 1 |

| வ எண். | பதவியின் பெயர் | பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி) |
|---|---|---|
| 11. | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆய்வாளர் | 167 |
| 12. | மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்–ஆய்வாளர் | 84 |
| 13. | அமைச்சுப் பணி மற்றும் களப்பணியாளர்கள் | 1,263+1 |
| | **மொத்தம்** | **1,586 + 12** |

| பொறியியல் பிரிவு | | |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் | 1 |
| 2 | செயற்பொறியாளர் | 5 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 13 |
| 4 | உதவி பொறியாளர் | 13 |
| 5 | இளநிலை பொறியாளர் | 17 |
| 6 | முதுநிலை வரைவு அலுவலர் | 1 |
| 7 | வரைவு அலுவலர் | 8 |
| 8 | இளநிலை வரைவு அலுவலர் | 4 |
| 9 | கோட்ட கணக்கு அலுவலர் | 4 |
| 10 | தொழில்நுட்ப உதவியாளர் | 23 |
| 11 | அமைச்சுப்பணி மற்றும் இதர பணியாளர்கள் | 9 |
| | **மொத்தம்** | **98** |

| கடல்வள சட்ட அமலாக்கப் பிரிவு | | |
|---|---|---|
| 1. | காவல்துறை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | துணை காவல் கண்காணிப்பாளர் | 1 |
| 3. | காவல் ஆய்வாளர் | 10 |
| 4. | காவல் சார்–ஆய்வாளர் | 8 |
| 5. | தலைமைக் காவலர்/காவலர் | 53 |
| 6. | காவல் ஊர்தி ஓட்டுநர் | 19 |
| 7. | கண்காணிப்பாளர் | 1 |
| 8 | உதவியாளர் | 2 |
| 9. | முகாம் உதவியாளர் | 17 |
| | **மொத்தம்** | **112** |
| | **மொத்தக் கூடுதல்** | **1,796+12** |

## 4. தமிழ் நாட்டின் மீன்வளம் – ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையினை கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தி 5.95 இலட்சம் மெட்ரிக் டன் (2021–22) ஆகும். இதில் 1.14 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.6559.64 கோடி அந்நிய செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன ஏரிகள், குளங்கள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் பிற நீர்நிலைகள் உள்ளடக்கிய 3.85 இலட்சம்

ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகள் உள்ளன. உள்நாட்டு மீன்வளம் 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது.

தமிழ்நாட்டிலுள்ள உப்பங்கழிகள், கழிமுகங்கள், முகத்துவாரங்கள் போன்ற 56,000 ஹெக்டேர் பரப்பளவிலான உவர் நிலப்பரப்புகள் மீன் வளர்ப்பிற்கான ஆதாரமாக உள்ளது. தற்போது 4207.34 ஹெக்டேர் பரப்பளவிலான 2,177 பண்ணைகள் மூலமாக கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.1 **கடல் மீன்வளம்**

கடல் மீன்வளம் குறித்த கண்ணோட்டம் அட்டவணை 2–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2**

**கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் 2022–23**


| | |
|---|---|
| கடற்கரை நீளம் | 1,076 கி.மீ. |
| பிரத்யேக பொருளாதார மண்டலம் (EEZ) | 1.9 இலட்சம் ச.கி.மீ. |
| கண்டத்திட்டு (Continental shelf) | 41,412 ச.கி.மீ. |
| கடலோர மாவட்டங்கள் | 14 |
| மீனவ கிராமங்கள் | 608 |
| கடலோர மீனவ மக்கட்தொகை | 10.48 இலட்சம் |


| | |
|---|---|
| தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள கடல் மீனவர்கள் | 4,41,977 |
| **பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் (இணைய வழி)** | |
| மீன்பிடி விசைப்படகுகள் | 5,830 |
| நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை) | 45,685<br>(41,593 + 4092) |

| | |
|---|---|
| **உட்கட்டமைப்பு வசதிகள்** | |
| பெரிய மீன்பிடி துறைமுகங்கள் – 9 | 1. சென்னை,<br>2. பூம்புகார், மயிலாடுதுறை மாவட்டம்<br>3. நாகப்பட்டினம்,<br>4. மூக்கையூர், இராமநாதபுரம் மாவட்டம்<br>5. தூத்துக்குடி,<br>6. சின்னமுட்டம், கன்னியாகுமரி மாவட்டம்<br>7. முட்டம் (PPP), கன்னியாகுமரி மாவட்டம்<br>8. குளச்சல், கன்னியாகுமரி மாவட்டம்<br>9. தேங்காப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம் |
| நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் – 4 | 1. பழையாறு, மயிலாடுதுறை மாவட்டம்<br>2. மல்லிப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்<br>3. கடலூர்,<br>4. நம்பியார்நகர், நாகப்பட்டினம் மாவட்டம் |

| | |
|---|---|
| கட்டுமானத்தில் உள்ள மீன்பிடி துறைமுகங்கள் – 5 | 1. திருவொற்றியூர்குப்பம், சென்னை மாவட்டம்,<br>2. அழகன்குப்பம், விழுப்புரம் மாவட்டம் மற்றும் ஆலம்பரைகுப்பம், செங்கல்பட்டு மாவட்டம்<br>3. வெள்ளப்பள்ளம், நாகப்பட்டினம் மாவட்டம்<br>4. தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம்<br>5. ஆற்காட்டுத்துறை, நாகப்பட்டினம் மாவட்டம் |
| மேம்பாட்டிலுள்ள மீன்பிடி துறைமுகங்கள் – 3 | 1. தேங்காப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டம்<br>2. தூத்துக்குடி,<br>3. பழையாறு, மயிலாடுதுறை மாவட்டம் |
| மீன் இறங்கு தளங்கள்/ படகு அணையும் தளங்கள் | 52 |
| மீன் இறங்கு மையங்கள் | 251 |
| கடல்மீன் உற்பத்தி (2021–22) | 5.95 இலட்சம் மெட்ரிக் டன் |
| கடல்பொருள் ஏற்றுமதி (2021–22) * | அளவு:1,14,810 மெட்ரிக் டன்<br>மதிப்பு: ரூ.6,559.64 கோடி |

ஆதாரம்: * கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)


தமிழ் நாட்டின் மொத்த மீன் உற்பத்தி
(இலட்சம் டன்களில்)
மீன்கள் உற்பத்தி
8.5
8
7.5
7
6.5
6
6.81
6.9
7.57
7.22
8.06
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
ஆண்டு


தமிழ் நாட்டின் மீன் மற்றும் மீன் பொருட்கள் ஏற்றுமதி
7,000
6,000
5,000
4,000
3,000
2,000
1,000
0
5408.81
5591.49
6210.52
5565.48
6559.64
1,144
1,288
1,349
1,100
1,148
2017-18
2018-19
2019-20
2020-21
2021-22
ஆண்டு
அளவு (100 மெட்ரிக் டன்களில்)
மதிப்பு (ரூ கோடிகளில்)

## 4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் அளவிலான உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் உள்ளன. இதில் நீர்த்தேக்கங்கள், நீண்டகால மற்றும் குறுகிய கால பாசன ஏரிகள், குளங்கள், ஆறுகள் மற்றும் இதர நீர்நிலைகள் மீன்பிடிப்பிற்கும் மற்றும் மீன் வளர்ப்பிற்கும் உகந்ததாக உள்ளன.

உள்நாட்டு மீன்வளம் குறித்த கண்ணோட்டம் அட்டவணை 3–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 3**

**உள்நாட்டு மீன்வள புள்ளி விவரங்கள் 2022 – 23**

| | |
|---|---|
| உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் | 3,85,761 ஹெக்டேர் |
| நீர்த்தேக்கங்கள் (90 எண்ணிக்கை) | 62,015 ஹெக்டேர் |
| பெரிய மற்றும் குறுகிய கால பாசன ஏரிகள் மற்றும் குளங்கள் | 2,67,746 ஹெக்டேர் |
| உவர்நீர் பரப்பளவு | 56,000 ஹெக்டேர் |
| உள்நாட்டு மீனவ மக்கட்தொகை | 2.36 இலட்சம் |
| தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள உள்நாட்டு மீனவர்கள் | 57,772 |

**உள்நாட்டு மீன்வள உட்கட்டமைப்புகள்**

| **மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்** | |
|---|---|
| i) அரசு மீன்பண்ணைகள் | 10+1 (TNFDC) |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | 42 |

**மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்**

| **மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்** | |
|---|---|
| i) அரசு மீன்பண்ணைகள் | 39+5 (TNFDC) |
| ii) தனியார் மீன்பண்ணைகள் | 290 |
| iii) கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு (அரசு) | 3 |
| 2021–22 ஆம் ஆண்டு உள்நாட்டு மீன் உற்பத்தி | 2.11 இலட்சம் மெட்ரிக் டன் |

**4.3 உவர்நீர் மீன்வள மேலாண்மை**

உவர்நீர் பரப்பானது முகத்துவார பகுதியில் வசிக்கக்கூடிய மீன் இனங்களின் இனப்பெருக்கம் மற்றும் மீன்களின் வாழ்க்கை சுழற்சிக்கு அடிப்படையாக அமைவதுடன், இனப் பெருக்கத்திற்காக ஓர் நீர்பரப்பில் இருந்து மற்றொரு நீர்பரப்பிற்கு செல்லும் மீன் இனங்களின் வாழ்விடமாகவும் உள்ளது. உவர்நீர் ஆதாரமானது, முகத்துவாரங்கள், உப்பங்கழிகள், சதுப்பு நில காடுகள் மற்றும் உப்பு நீர் ஏரிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

இவை வணிக மற்றும் சுற்றுசூழலுக்கு முக்கியமான மீன்கள், இறால் மற்றும் நண்டுகளின் இனப்பெருக்கம் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தி நடைபெறும் இடங்களாகும்.

பழவேற்காடு ஏரி, ஆரணியாறு, எண்ணூர், முட்டுக்காடு உப்பங்கழிகள், பழையாறு, பிச்சாவரம், புன்னக்காயல், முத்துப்பேட்டை உப்புநீர் பகுதி, மணக்குடி, தேங்காப்பட்டினம், கொள்ளிடம், கெடிலம் மற்றும் அடையார் உப்பங்கழிகள் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான முகத்துவார மற்றும் உவர்நீர் பகுதிகளாகும். உவர்நீர் மற்றும் முகத்துவார ஏரிகள் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுசூழல் முக்கியத்துவம் கொண்ட அதிக உற்பத்தி திறன் கொண்ட நீர் நிலை பகுதிகளாகும். தமிழ்நாட்டின் மொத்த உவர்நீர் பரப்பளவு 56,000 ஹெக்டேர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது இந்தியாவின் மொத்த உவர்நீர் பரப்பில் 3.98 சதவீதம் ஆகும்.

## 4.4 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

உலகின் பல பகுதிகளில் கடல் மீன் பிடிப்பின் மூலம் கிடைக்கப்பெறும் மீன்களின் அளவு மற்றும் மீன் வளங்கள் மிகவும் குறைந்து வருகிறது. ஆனால், உலகளவில் தொடர்ந்து அதிகரித்து வரும் கடல்

உணவுக்கான தேவை, கடல் மீன்பிடிப்பு குறைந்து வருதல் மற்றும் மீன்பிடித்தலுக்கு தேவையான உள்ளீட்டு செலவுகள் அதிகரித்தல் ஆகியவை கடல் உயிரின வளர்ப்பு மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசின் கொள்கை கட்டமைப்பானது அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம் பொறுப்பான மற்றும் நிலையான கடலோர மீன் வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பினை ஊக்குவிக்கிறது.

ஏற்றுமதி வர்த்தகத்திற்கான கடல் உணவுப் பொருட்களில், இறால் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், நவீன மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்களில் இறால் வளர்ப்பு மிகுந்த இலாபம் ஈட்டக்கூடிய தொழிலாக கருதப்படுகிறது. இறால் வளர்ப்பின் மூலம் கடலோரப் பகுதிகளில் அதிகளவு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், இத்தொழில் நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருகிறது. தமிழ்நாட்டில் 4207.34 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ள 2,177 இறால் பண்ணைகள் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் இயங்கி வரும் 78 இறால் குஞ்சு பொரிப்பகங்கள்

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலத்திற்கு தேவையான இறால் குஞ்சுகளை வழங்கி வருகின்றன.

**5. கடல் மீன்வள செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்**

2022-23 ஆம் ஆண்டில் பல்வேறு கடல் மீனவர் நலன் சார்ந்த திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு ரூ.319.04 கோடி விடுவித்துள்ளது.

பல்வேறு நலத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :

**5.1. மாநிலத் திட்டங்கள்**

**5.1.1. மீன்பிடிப்பு குறைவு காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல்**

மீன்பிடி குறைவு காலத்தில், கடல் மீனவர் குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக கடல் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி குறைவு காலத்தில் தமிழ்நாடு அரசு நிவாரணத் தொகை வழங்கி வருகிறது.

2021-22 ஆம் ஆண்டு முதல் கடல் மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு நிவாரணத் தொகையை ரூ.5,000/-லிருந்து ரூ.6,000/-ஆக அரசு உயர்த்தியுள்ளது.

அதன்படி, 2022-23 ஆம் ஆண்டில் மீன்பிடி குறைவுகால சிறப்பு நிவாரணத் தொகைக்கென

ரூ.104.38 கோடி அரசு ஒப்பளித்தது. மேற்காணும் தொகையில் 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,54,384 மீனவ குடும்பங்களுக்கு ரூ.92.63 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மேற்படி உதவித் தொகை 2023 ஆம் ஆண்டு மே மாதத்தில் முடிவுறும்.

இத்திட்டம் **2023–24**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.2 கடல் மீனவர்களுக்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டமானது மாநில அரசின் நிதியுதவி திட்டமாக 2022–23ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மீனவர் பங்களிப்புத் தொகை ரூ.1,500/– உட்பட நிவாரணத் தொகையாக ரூ.4,500/– மீன்பிடி குறைவு காலத்தில் வழங்கப்படுகிறது. 2022–23 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.63.26 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு, அத்தொகையில் இதுவரை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,74,772 கடல் மீனவர்களுக்கு மொத்தம் ரூ.52.43 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும்

திருநெல்வேலி மாவட்டங்களில் நிவாரணத் தொகை வழங்குவது மே 2023ல் முடிவுறும்.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.3. கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் 2006-2007-ஆம் ஆண்டு முதல் மாநில அரசு நிதியுதவி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மீனவ மகளிருக்கும், மீனவ மகளிரின் பங்களிப்புத் தொகையான ரூ.1,500/-ஐ சேர்த்து மொத்த நிவாரணத் தொகையாக ரூ.4,500/- வழங்கப்பட்டு வருகிறது. 2022-23 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ.63.36 கோடி அரசால் நிதி ஒப்பளிக்கப்பட்டு அத்தொகையில் இதுவரை திருவள்ளூர் முதல் இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 12 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,75,588 கடல் மீனவ மகளிருக்கு மொத்தம் ரூ.52.67 கோடி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிவாரணத் தொகை வழங்குவது மே 2023ல் முடிவுறும்.

இத்திட்டம் 2023–24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.4 மீன்பிடி படகுகளுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

தமிழ்நாடு அரசு, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விசைப்படகிற்கு ஒரு ஆண்டிற்கு 18,000 லிட்டரும், அதாவது ஒரு விசைப்படகிற்கு 2 மாத மீன்பிடித் தடைக்காலம் தவிர 10 மாதங்களுக்கு, மாதத்திற்கு 1800 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகிற்கு, ஒரு ஆண்டிற்கு அதிகபட்சமாக 4,000 லிட்டர் வரி விலக்களிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் வழியாக வழங்கி வருகிறது.

2022–23 ஆம் நிதியாண்டில், விற்பனை வரி தொகை ரூ.169.27 கோடி அளவில் விலக்களிக்கப்பட்டு,விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட 93,992 கிலோ லிட்டர் டீசல் எரியெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

## 5.1.5 பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்குதல்.

தமிழ்நாடு அரசு தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய நாட்டுப்படகுகளுக்கு ஓராண்டில் ஒரு படகிற்கு 3400 லிட்டர் தொழிலக மண்ணெண்ணெயினை லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 வீதம் மானிய விலையில் வழங்கி வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், ரூ.112.02 கோடி மானியத்துடன் 17,100 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் .

## 5.1.6 கடலில் மீன்பிடிக்கும் போது பிறநாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித்தொகை வழங்குதல்

கடலில் மீன் பிடிக்கும் போது இலங்கை மற்றும் பிற அண்டை நாட்டினரால் சிறைபிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் தின உதவித்தொகையாக மாநில அரசு

வழங்கி வருகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், சிறைபிடிக்கப்பட்ட 121 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.10.53 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 5.1.7 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு தின உதவித்தொகையாக ரூ.250/-வீதம் (மாதமொன்றுக்கு ரூ.7,500/-) மாநில அரசால் வழங்கப்படுகிறது. கடலில் மீன்பிடிப்பிற்காக சென்று காணாமல் போயிருக்கும் மீனவர்களின் குடும்பங்களுக்கு இந்த உதவித் தொகையினை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது குழுவிபத்து காப்புறுதி திட்டம் / தமிழ்நாடு மீனவர் நலவாரியம் ஆகியவற்றின் கீழ் நிவாரண உதவி பெறும் வரை வழங்கப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டிற்கு ரூ.7.81 இலட்சம் தின உதவி தொகை 18 மீனவ குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2023–24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.1.8 இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவரது குடும்பத்தினருக்கு / காயமடையும் மீனவருக்கு நிவாரணம் வழங்குதல்**

கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்கள், பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக்–வளைகுடா பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல் / துன்புறுத்தப்படுதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்வதோடு, சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளின் போது மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர், அவரது குடும்பத்தில் பொருளீட்டக்கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறுகாயம் அடையும் போது முறையே ரூ.50,000/– மற்றும் ரூ.20,000/– கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

### 5.1.9 புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

கடலோர மீன்வளங்களை பாதுகாப்பதன் மூலம் நிலையான மீன்வளத்தைப் பெருக்கவும், அதிகம் பிடிக்கப்படாத ஆழ்கடல் மீன்வளங்களான சூரை மீன் மற்றும் அதுபோன்ற மீன் இனங்களை மீனவர்கள் பிடிப்பதை ஊக்கப்படுத்திடவும், 'தூண்டில் மற்றும் செவுள் வலையுடன் கூடிய புதிய சூரை மீன்பிடி படகுகள்' வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், படகு ஒன்றினை கட்டுவதற்கான உத்தேச மதிப்பு ரூ.60 இலட்சத்தில், 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை ரூ.51.30 கோடி திட்ட மதிப்பீட்டில் 171 சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 103 படகுகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.29.35 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டு படகுகளின் கட்டுமான பணிகள் ஆரம்ப நிலையில் உள்ளன. தற்பொழுது 66 பயனாளிகளுக்கு புதியதாக பணி ஆணைகள்

வழங்கப்பட்டு, படகு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 5.2 ஒன்றிய அரசு பங்களிப்புத் திட்டங்கள்

### 5.2.1 மீன்பிடி தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கான நிவாரண தொகை வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடி தடைக்காலம் கிழக்கு கடற்கரைப் பகுதியில் (திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரோக்கியபுரம் வரை) ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், 61 நாட்களுக்கும் மேற்கு கடற்கரை பகுதியில் (கன்னியாகுமரி மாவட்டத்தில் இராஜாக்கமங்கலம்துறை முதல் நீரோடி வரை) ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும் 61 நாட்களுக்கு அமல்படுத்தப்படுகிறது.

மீன்பிடி தடை காலத்தில் மீனவர்களின் துயரினை களைந்திட, 14 கடலோர மாவட்டங்களில் உள்ள கடலோர மீனவ குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.5000/– வீதம் மீன்பிடி தடைகால நிவாரணமாக அரசு வழங்கி வருகிறது. இதனில், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்றிய

அரசு ரூ.1500/−ஐ தனது பங்குத்தொகையாக வழங்குகிறது.

2022−23 ஆம் ஆண்டில் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,78,472 மீனவ குடும்பங்களுக்கு ரூ.89.24 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.2 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) மூலம் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் விபத்தில் இறந்த மீனவருக்கு ரூ.5 இலட்சம் மற்றும் விபத்தில் ஊனமடைந்த மீனவருக்கு ரூ.2.50 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படுகிறது. 2022−23ஆம் ஆண்டிற்கு 5,43,949 உறுப்பினர்களுக்கு மாநில அரசின் பங்குத்தொகையாக ரூ.1.57 கோடி (40% பிரிமியத் தொகை) தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டு, 25.07.2023 வரை இத்திட்டம் நடைமுறையில் இருக்கும்.

### 5.2.3 பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்

பாரம்பரிய மீன்பிடி கலன்களில் பொருத்திட வெளிப்பொருத்தும் இயந்திரம் / உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு, இயந்திரத்தின் ஒரு அலகிற்கான விலையில் 40 விழுக்காடு அல்லது

ரூ.48,000/- மானியமாக வழங்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், பாரம்பரிய நாட்டுபடகு மீனவர்களுக்கு 2,586 உட்பொருத்தும் / வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் ரூ.9.60 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**5.2.4 பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றுவதற்கு மானியம் வழங்குதல்**

பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவைப் படகுகளுக்கு மாற்றாக ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகளைக் கட்டுவதற்கு, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் 70 விழுக்காடு மானியம் வழங்கி செயல்படுத்தி வருகிறது. ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில், 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாக ரூ.40 இலட்சமும், 20 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.16 இலட்சமும், 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்பாக ரூ.8 இலட்சமும், மீதமுள்ள 20 விழுக்காடு ரூ.16 இலட்சம் வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 55 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், 24 படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளது.

### 5.2.5 பாரம்பரிய நாட்டுப்படகுகளுக்கு மாற்றாக கண்ணாடி நாரிழைப்படகு மற்றும் இதர உபகரணங்கள் வாங்க மானியம் வழங்குதல்

'பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் பாரம்பரிய மீனவர்கள் பயன்படுத்தும் நாட்டுப் படகுகளுக்கு மாற்றாக 10 மீட்டர் ஒட்டுமொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப் படகுடன் வலைகள், வெளிப்பொருத்தும் இயந்திரம் மற்றும் குளிர்காப்பு பெட்டி வாங்குவதற்கு, அதன் அலகு ஒன்றின் விலையான ரூ.5.00 இலட்சத்தில் 40% விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் மானியமாக அரசு வழங்கி வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில் ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் 300 கண்ணாடி நாரிழைப் படகுகள் வழங்க அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 5.3 மீன்பிடி ஒழுங்குபடுத்துதல் மற்றும் சட்ட அமலாக்கம் செய்தல்

### 5.3.1 மீன்பிடி கலன்களை பதிவுசெய்தல்

மீன்பிடி கலன்களின் இயக்கத்தை கண்காணித்திடவும், கடலோர பாதுகாப்பினை

உறுதிப்படுத்திடவும் மீன்பிடி கலன்கள் இணையதளம் மூலம் ('ReALCraft' website) பதிவு செய்யப்பட்டு வருகிறது. 5,830 மீன்பிடி விசைப்படகுகள், 41,593 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 4,092 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகள் 'ReALCraft' இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**5.3.2 கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்ட அமலாக்கப்பிரிவு**

தமிழ்நாடு கடல்மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை சிறப்பாக அமல்படுத்துதல் சட்டத்திற்கு முரணான மீன்பிடிப்பை தடுத்தல், மீன்வள ஆதாரத்தை பாதுகாத்தல், மீன்பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்துவதற்கு மீன்வளத் துறைக்கென தனியே சட்ட அமலாக்கப் பிரிவுக்கான 112 பணியிடங்களில், 92 காவல்துறை அலுவலர்களுடன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 14 கடலோர மாவட்டங்களில், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டம், 1983–ஐ அமலாக்கம் செய்திட, ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், 10 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் சார்–ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 19 காவல் ஓட்டுநர்கள் ஆகிய நிரந்தரப்

பணியிடங்களைக் கொண்டு இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

சட்டத்திற்கு புறம்பான மீன்பிடிப்பு, அழிவை ஏற்படுத்தும் மீன்பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதை தடுத்தல் மற்றும் மீன்பிடித்தலில் ஒழுங்குமுறையை நிலைநாட்டிட கடலில் ரோந்து பணி மேற்கொள்ளுதல், ரோந்துப் பணியின் போது சேகரிக்கப்படும் சமூகவிரோத செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களை கடலோர பாதுகாப்புப்படை மற்றும் உள்ளூர் காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கிய பணிகளை இந்த அமலாக்க பிரிவு மேற்கொண்டு வருகிறது .

## 5.4 பேரிடர் தயார்நிலை, மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்

மோசமான வானிலை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

1) மீனவர்களுக்கு வானிலை மற்றும் புயல் எச்சரிக்கை தகவல்களைப் பகிர்தல்.

2) வானிலைத் தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு 24 மணி நேரமும் வழங்கிடத்

தேவையான தொலைதொடர்பு வசதிகளுடன் கூடிய மத்திய கட்டுப்பாட்டு அறை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்தக்கட்டுப்பாட்டு அறைப்பணிக்காக பிரத்யேக தொலைபேசி எண். 044-29530392 வழங்கப்பட்டுள்ளது.

3) தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் கடலோர காவல் குழுமம், இந்திய கடலோர காவல் படை மற்றும் இந்திய கப்பல்படை ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

### 5.4.1 கடலில் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பிற்கான நடவடிக்கைகள்

#### 5.4.1.1 கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்குதல்

கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட, தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கிய தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு 18 தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடலில் உள்ள மீன்பிடி கலன்கள் கரைப்பகுதியினை தொடர்பு கொள்ள ஏதுவாக

15 இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு விலையில்லா 5 வாட் வி.எச்.எப். கருவிகள் 17,795 எண்ணம் மற்றும் விசைப்படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 3,135 எண்ணம் 25 வாட் வி.எச்.எப். கருவிகளும், ஆக மொத்தம் 20,930 வி.எச்.எப். தொலைதொடர்பு கருவிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

### 5.4.1.2 விசைப்படகுகளில் 'டிரான்ஸ்பாண்டர்கள்' (Transponders) பொருத்துதல்

200 கடல் மைல்கள் வரை ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும், மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும் பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் டிரான்ஸ்பாண்டர்களை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 4,997 விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்களை பொருத்திடும் பொருட்டு ஒன்றிய அரசு ரூ.18.01 கோடி நிதி விடுவித்துள்ளது. மீன்பிடி விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்திடும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.12.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அதனைத்

தொடர்ந்து விசைப்படகுகளில் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### 5.4.1.3 செயற்கைகோள் தொலைபேசி, "நேவிக்" (NavIC) மற்றும் "நேவ்டெக்ஸ்" (NavTex) தொலைத்தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பினை மேம்படுத்தும் வகையில் 80 விசைப்படகு குழுக்களுக்கு ரூ.2.28 கோடி செலவில் 160 செயற்கைகோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் ஆகிய தொலைத்தொடர்பு கருவிகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு மானிய விலையில் 500 விசைப் படகுகளுக்கு செயற்கைகோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 5.4.1.4 "தூண்டில்" – கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவை

மீன்பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடி கலன்களை கண்காணிப்பதின் மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விபரங்களை பதிவு செய்திடவும்,

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஒன்றிய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் (MoES) தேசிய கடலோர ஆராய்ச்சி நிலையத்துடன் (NCCR) இணைந்து, இணையதளம் வாயிலாக "தூண்டில்" எனும் கைபேசி செயலி இயக்கப்படுகிறது.

இந்த செயலி, கடலில் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், படகின் கடற்பயண பதிவுகள், பாதுகாப்பான இடம் செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களை பெறுதல், மீன் அதிகம் கிடைக்கும் பகுதிகளை பதிவு செய்தல் மற்றும் வானிலை அறிக்கை அறிந்துகொள்ளவும் உதவுகிறது .

### 5.4.2 அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகளுக்கு நிவாரணம் வழங்குதல்

அசாதாரண சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகள் / மீன்பிடி உபகரணங்கள் / வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும் பொருட்டு, ஒரு கடலோர மாவட்டத்திற்கு ரூ.10 இலட்சம் வீதம் அனைத்து கடலோர மாவட்டங்களுக்கும் ரூ.1.30 கோடி சுழல் நிதி தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 2022-23 ஆம் ஆண்டில் மோசமான வானிலையால் சேதமடைந்த 9 மீன்பிடி படகுகளுக்கு ரூ.10.89 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**5.4.3 மாண்டஸ் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்**

கடந்த 2022 ஆம் ஆண்டு உருவான "மாண்டஸ்" புயல் காரணமாக, சென்னை, செங்கல்பட்டு, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை மற்றும் காற்றினால், இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடி படகுகள், கண்ணாடி நாரிழைப்படகுகள், மீன்பிடி வலைகள் மற்றும் இயந்திரங்கள் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, 2022 மாண்டஸ் புயலின் போது ஏற்பட்ட சேதங்களுக்கு அரசால் ரூ.4.67 கோடி நிவாரணம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**5.4.4 கடல் ஆமைகளை பாதுகாத்தல்**

தமிழ்நாடு கடற்பகுதியில் கடல் ஆமைகளை பாதுகாத்திடும் பொருட்டு, மீன்பிடி இழுவலைகளில் கடல் ஆமைகள் சிக்காமல் வெளிச்செல்ல ஏதுவாக, இழுவலைகளில் உள்ள தூர்மடியில் Turtle Excluder Device (TED) கருவிகள் பொருத்திடவும், ஒவ்வொரு ஆண்டும் கடல் ஆமைகளின் இனப்பெருக்கக் காலமான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 30 முடிய கடல்

ஆமைகள் முட்டையிடும் கடற்பகுதியின் 5 கடல் மைல்களுக்குள் அனைத்து வகை படகுகளும் மீன்பிடிக்கத் தடையாணை பிறப்பித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

## 5.5 தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

### 5.5.1 கச்சத்தீவினை திரும்ப பெறுதல்

பாக் நீரிணை பகுதியில் 2,490 விசைப்படகுகள், 12,443 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் மற்றும் 1,020 நாட்டுப் படகுகள் பாரம்பரிய கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. பாக் நீரிணை பகுதி மாவட்டங்களில் உள்ள 286 மீனவ கிராமங்களில் 2,08,827 மீனவ மக்கள் வாழ்கின்றனர். பாக் நீரிணை பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் சுமார் 80,000 மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக அத்துடன் பெரும்பான்மையான கடலோர மக்கள் மறைமுகமாகவும் தங்களது வாழ்வாதாரத்திற்காக பாக் நீரிணையின் பாரம்பரிய மீன்பிடிப்பை சார்ந்துள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்கள் தங்களது பாரம்பரிய கடற்பகுதியில் மீன்பிடிக்கும்போது சர்வதேச கடல் எல்லையை கடப்பதாக கூறி இலங்கை

கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். இலங்கை அரசால் நமது மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது தமிழ்நாடு மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, "கச்சத்தீவை" மீட்டெடுத்து மீண்டும் இந்தியாவிற்கு கிடைப்பது மற்றும் பாக் நீரிணை பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், 1974ல் இந்திய அரசால் இலங்கைக்கு ஒருதலைப்பட்சமாக வழங்கப்பட்ட "கச்சத்தீவை" மீட்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றத்திலும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழ்நாடு அரசும் வாதியாக இணைந்து, கச்சத்தீவை மீட்க இந்திய அரசை வலியுறுத்தியது.

அதன்பின் SLP.எண்.8013/2017ல், தனி நபர் ஒருவர், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில்

செய்துகொள்ளப்பட்ட 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் 6வது பிரிவைச் செயல்படுத்த / அமல்படுத்த இந்திய ஒன்றியத்திற்கு எதிராக மனுத்தாக்கல் செய்துள்ளார். அத்துடன் அவ்வொப்பந்தம் தொடர்பான 23.03.1976 நாளைய கடிதத்திலுள்ள ஆட்சேபனைக்குரிய பிரிவுகளை நீக்கிட கோரியுள்ளார். தமிழ்நாடு அரசு 05.08.2021 அன்று மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தில் எதிர் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.06.2021 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு வழங்கிய கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், 01.04.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மீனவர்கள் எதிர்க்கொள்ளும் இன்னல்களுக்கு நிரந்தர தீர்வு காணவேண்டியும், பாரம்பரிய கடற்பகுதியில் தங்களது மீன்பிடி உரிமையை மீட்டெடுப்பதற்கும் மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். எனவே, மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சத்தீவு மீதான இந்தியாவின்

இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதை தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

### 5.5.2 இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் முடக்கி வைக்கப்பட்டுள்ள அவர்களின் படகுகளை விடுவித்தல்

தமிழ்நாடு மீனவர்கள் பாரம்பரியமான பாக் வளைகுடா பகுதியில் தங்கள் மீன்பிடிப்பை மேற்கொள்ளும் போது சர்வதேச கடல் எல்லையை தாண்டுவதாக தெரிவித்து, இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்படும் தொடர் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர். தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுதல், துன்புறுத்தப்படுதல், சிறைபிடிக்கப்படுதல் போன்ற சம்பவங்களால் பாதிக்கப்படும் போது, இரு நாட்டு தூதரக அளவில் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, அவர்களை விடுவிக்க வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கடிதங்கள் வாயிலாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசு, கைது செய்யப்படும் மீனவர்களை விடுவிப்பதற்கு தூதரக ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது. 01.04.2022 அன்று மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை மீட்க, மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளார். இதற்குமுன்பு அதிகபட்சமாக 113 நாட்கள் வரை இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு மீனவர்கள், இந்த அரசு எடுத்த முயற்சிகளினால், மிகக்குறைந்த காலமான பதினாறு நாட்களிலேயே தாய்நாடு திரும்பியுள்ளனர். தற்போது வரை இலங்கை அரசு வசமுள்ள 110 படகுகளில் 6 படகுகள் விடுவிக்கப்பட்டதில் 1 படகு தமிழ்நாடு திரும்பியுள்ளது. விடுவிக்கப்பட்ட மீதமுள்ள 5 படகுகளுடன் இலங்கை சிறையில் உள்ள 12 மீனவர்கள் மற்றும் விடுவிக்கப்படாத 104 படகுகளையும் தமிழ்நாட்டிற்கு கொண்டுவர அரசு அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது.

### 5.5.3 மீன்வளத்திற்கான இந்திய–இலங்கை கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் (JWG)

மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகளை விடுவிப்பது, ரோந்து மற்றும் கைது நடவடிக்கையின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் / நெறிமுறைகள் மற்றும் மீனவர்களை மனிதாபிமான முறையில் கையாளுவது குறித்து மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் (JWG) நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை, ஐந்து சுற்றுகள் இந்திய–இலங்கை கூட்டு பணிக்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த கூட்டங்களின்போது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவித்து, திருப்பி அனுப்புவது குறித்து மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

## 5.6 உவர்நீர் மீன்வளம், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கடல் உயிரின வளர்ப்பு

### 5.6.1. உவர்நீர் மீன்வளம்

உவர்நீர் மீன்பிடிப்பை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் மாநிலத்தின் நீண்ட கால மீன்வள நிலைத்தன்மைக்கு மிகவும் முக்கியமானதாக உணரப்படுகிறது. சுற்றுசூழலுக்கு உகந்த மற்றும் செலவு குறைந்த

உவர்நீர் மீன்வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடிப்பு, முக்கியமாக இறால்களை இருப்பு செய்தல், நண்டு மற்றும் பிற பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த துடுப்பு மீன்களை வளர்த்து அவைகளை உவர்நீர் பரப்பில் இருப்பு செய்தல் போன்ற செயல்பாடுகளை உவர்நீர் மீன்வள கொள்கையின் மூலம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மேலாண்மைக்கு அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் உத்திகள் மற்றும் செயல்பாட்டு திட்டங்கள் பின்வருமாறு:

1. உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மீன்வளங்களை திறம்பட மேலாண்மை செய்தல், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான நிலைத்தன்மைக்கு மிகவும் அவசியம்.
2. உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார மீன்வள மேலாண்மைக்கான குறிப்பிட்ட வழிகாட்டுதல்களுடன் கடலோர மண்டல மேம்பாட்டுத் திட்டத்தில் உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவார வாழ்விடங்களை ஒருங்கிணைப்பதை உறுதி செய்தல்.

3. உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் மீன்பிடித்தலை திறம்பட மேம்படுத்திட மற்றும் இனப்பெருக்கம் மற்றும் நாற்றாங்கால் பகுதிகளில் உற்பத்தியை உறுதி செய்தல், மீன் இனங்களின் இடம்பெயர்வு வழிகளையும் உறுதி செய்தல்.
4. உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரப் பகுதிகளில் மீன்வள மேலாண்மை மற்றும் உயிர் பன்முகத் தன்மையைப் பாதுகாப்பதில் சமூகத்தின் பங்களிப்பினை அதிகப் படுத்துதலை ஊக்குவித்தல்.
5. விரிவான ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு மூலம் உவர்நீர் ஏரிகள் மற்றும் முகத்துவாரங்கள் தொடர்புடைய தரவு மற்றும் தகவல்களை சேகரித்து அதன் மூலம் உவர்நீர் மீன்வள மேலாண்மைப் பணிகளை திறம்பட மேற்கொள்ளுதல்.

### 5.6.2. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

மீன் உற்பத்தியினை பெருக்குவதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் நீர் ஆதாரங்களின் உற்பத்திப் பயன்பாட்டினை அதிகரித்தல் ஆகியவை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பின் முக்கியத்துவங்களாகும். தற்போது மாநிலத்தில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பில், இறால் வளர்ப்பு மிக முக்கிய செயல்பாடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலோரப் பகுதிகளில்

இறால்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், குளங்கள் மற்றும் கூண்டுகளில் மாற்று மீன் இனங்களான நண்டு, பால் மீன், மடவை மற்றும் கொடுவா மீன் வளர்ப்பினை ஊக்குவிக்க அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளை, கொடுவா, பால் மீன், சில்வர் பாம்பனோ, மடவை, கரிமீன் மற்றும் நண்டு போன்ற பல்வகைப்பட்ட இனங்களை வளர்க்க ஊக்குவித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குளம் சார்ந்த மீன் வளர்ப்பு, நீர் பரிமாற்றமில்லாத மீன் வளர்ப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டு முறையில் மீன் வளர்ப்பு, உயிர்க்கூழ்ம மீன் வளர்ப்பு மற்றும் பிற புதுமையான தொழில்நுட்பங்கள் மூலம் நீர் மற்றும் பிற இயற்கை வளங்களை முறையாக உபயோகப்படுத்தி கடலோர மீன்வளர்ப்பினை மேற்கொள்ள அரசால் ஊக்குவிக்கப்படுகிறது.

மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் மூலம் மேற்கொள்ளப்பட்ட உவர்நீர் மீன் வளர்ப்பிற்கு உகந்த இடங்களை கண்டறிந்து வரைபடம் (Resource Mapping) தயாரிக்கும் பணியின் மூலமாக தமிழ்நாடு கடலோர பகுதிகளில் சுமார் 10,099 ஹெக்டேர்

பரப்பளவிலான மீன்வளர்ப்பிற்கு உகந்த நிலப்பரப்பு கண்டறியப்பட்டுள்ளது. எனவே, கடலோரப் பகுதிகளில் உவர்நீர் மீன்வளர்ப்பினை அதிகப்படுத்துவதன் மூலம் கடலோர மீனவ கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட அதிகளவில் வாய்ப்பு உள்ளது.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்துவதற்காக பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

1. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டத்தில் மீன் வளர்ப்பிற்கு உகந்த உவர் நிலங்களை தொலையுணர்வு (Remote Sensing) மற்றும் புவியியல் தகவல் முறைமை (GIS) மூலம் கள ஆய்வுகளின் அடிப்படையில் வரைபடமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக அரசு கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கடலோர தரிசு நிலங்களில் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேற்கொள்ள நில குத்தகை கொள்கையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
3. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில் விவசாயத்திற்கு

பயன்படாத உவர்நீர் தரிசு நிலங்களில் பிரத்யேக உவர்நீர் மீன்வளர்ப்பு மண்டலங்கள் உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

4. சினை இறால் வங்கி, நோய்கிருமியற்ற இறால் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தி செய்வதற்கான பொரிப்பகங்கள் மற்றும் உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மீன்தீவனம் தயாரிக்கும் ஆலைகள் ஆகியவற்றை நிறுவ தனியார் துறை ஊக்குவிக்கப்படும்.

இறால் பண்ணை பதிவு செய்தல் மற்றும் பதிவு புதுப்பித்தலை எளிமையாக்க கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய விதிகள் திருத்தப்பட்டு, தற்போது மாவட்ட அளவிலான உப குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைத்து, இறால் பண்ணைகள் பதிவு மற்றும் பதிவு புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள மாநில அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ரூ.18.50 கோடி மதிப்பீட்டில் இறால் வளர்ப்பு தொழிலை மேம்படுத்திட அரசிடமிருந்து நிருவாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி நிருவாக அனுமதியின்படி

செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரம் அட்டவணை 4–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 4**

| வ. எண் | திட்ட விவரம் | அலகு | திட்ட செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | புதிய உவர்நீர் இறால் வளர்ப்பு குளங்கள் அமைத்தல் | 100 ஹெக்டேர் | 800.00 |
| 2 | உவர்நீர் இறால் வளர்ப்பிற்கான உள்ளீட்டு மானியம் வழங்குதல் | 100 ஹெக்டேர் | 600.00 |
| 3 | உயிர் கூழ்ம குளங்களில் (Biofloc) இறால் வளர்த்தல் | 25 எண்ணம் | 450.00 |
| | | **மொத்தம்** | **1850.00** |

கடலில் மிதவை கூண்டுகள் அமைத்து, மீன்வளர்ப்போருக்கு தேவையான அளவு கடல் மீன் குஞ்சுகளை வழங்குவதற்காக இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் கடல் மீன் குஞ்சு வளர்ப்பு மையம் மாநில அரசால் நிறுவப்பட்டு, அதன் மூலம் 73,000 கடல் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.30 இலட்சம் செலவில் இரண்டு கடல் மீன் குஞ்சு நாற்றாங்கால் அலகுகளை நிறுவ மீன் வளர்ப்போருக்கு மானிய உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

### 5.6.3 கடல் உயிரின வளர்ப்பு

கடல் உயிரின வளர்ப்பானது மீன் வளர்ப்பின் ஒரு பிரிவாகும். இது கடலோர மற்றும் அண்மைக்கடல் பகுதியில் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது குறைந்த கட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் நீர்வாழ் உயிரினங்களை வளர்ப்பதை உள்ளடக்கியது. அதிக வளர்ச்சி திறன் கொண்ட மற்றும் வேகமாக வளர்ந்து வரும் கடல் உயிரின வளர்ப்பு, இலாபம் ஈட்டக்கூடிய ஒரு முக்கிய மீன்வள தொழில்நுட்பமாகும். கடலோர மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு கடற்பாசி வளர்ப்பு, கடலில் மிதவை கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற கடல் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் மாநிலத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

கடலில் மிதவை கூண்டுகளில் மீன் வளர்ப்பதன் மூலம் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மீன் இனங்களின் உற்பத்தியினை அதிகரிக்க இயலும். கடலில் மிதவை கூண்டுகளில் மீன் வளர்ப்பானது

மீன் உற்பத்தியினை அதிகரிப்பதோடு, கடலோர மீனவ இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை வழங்குகிறது. மேலும், கடலோர பகுதியில் மீன்பிடி அழுத்தத்தினை குறைப்பதற்கும், மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரம் அளிப்பதற்கும் கடலில் மிதவை கூண்டுகளில் மீன் வளர்ப்பினை விரிவுபடுத்துவது அவசியமாகும்.

மாநிலத்தில் ஒரு நிலையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த கடல் உயிரின வளர்ப்பினை மேம்படுத்தவும், கடற்பாசி மற்றும் மீன் உற்பத்தியினை அதிகரிக்கவும், மீன்வளர்ப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை வழங்கவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. நவீன மீன்வள தொழில்நுட்பங்கள் மூலம் கடலில் மீன்வளர்ப்பினை மேற்கொள்வதற்கான தகுதி வாய்ந்த கடல் மண்டல பரப்புகளை கண்டறிதல் மற்றும் கடலில் மீன்வளர்ப்பிற்கு உகந்த பல்வகை மீன்இனங்களை வளர்ப்பதற்குரிய தொழில் நுட்பங்களை கண்டறிந்து மீன்களை வளர்ப்பதற்கான சீரிய திட்டங்களை செயல்படுத்துதல்.

2. கடலோர மாவட்டங்களில் வாழும் மீனவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் கடல் நீர்பரப்பில் உகந்த பகுதிகளை கண்டறிந்து, அப்பரப்பில் கடல் மீன் வளர்ப்பை உரிய மீன்வள அறிவியல் தொழில் நுட்பத்தின் மூலம் செயல்படுத்துதல் மற்றும் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

3. கடல் உயிரின வளர்ப்பினை ஊக்குவித்திட, பயனாளிகளுக்கு உரிய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார உதவிகள் வழங்கிட ஒன்றிய மற்றும் மாநில அரசு மூலம் திட்டங்களை செயல்படுத்துதல்.

4. ஒருங்கிணைந்த கடல் மீன்வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு, அத்திட்டத்தினை தகுதி வாய்ந்த கடலோர மாவட்டங்களில் செயல்படுத்திட ஏதுவாக வங்கிகளில் நிதி ஆதாரம் பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

### 5.6.4 கடற்பாசி வளர்ப்பு

கடலோர மீனவ கிராமப்புற பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு கடற்பாசி வளர்ப்பானது முக்கிய பங்காற்றி வருகிறது. தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் வாழும் சிறியளவிலான குடும்பங்கள் மற்றும் மீனவ சமூகம் சார்ந்த மகளிர் குழுக்கள் கடற்பாசி வளர்ப்பு தொழிலை மேற்கொள்ள

அதிகளவு சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்தியாவிலேயே கடற்பாசி வளர்ப்பில் தமிழ்நாடும் முதலிடத்தில் உள்ளது. கடற்பாசி வளர்ப்பை மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கையாக ஊக்குவிப்பதற்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. கடலோர மீனவ கிராமங்களில் வசிக்கும் மீனவ மகளிரின் சமூக அதிகாரத்தை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் கடற்பாசி வளர்ப்பு திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. கடற்பாசி வளர்ப்பதற்கு 1,956 மீனவ மகளிருக்கு ரூ.2.43 கோடி செலவில் 16,000 கடற்பாசி வளர்ப்பிற்கான மிதவைகள் மற்றும் கயிறுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 5,048 ஹெக்டேர் பரப்பு கடற்பாசி வளர்ப்பிற்கு உகந்ததாக கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் தற்போதைய கடற்பாசி தேவை சுமார் 1,15,150 மெட்ரிக் டன்களாக இருப்பினும், மாநிலத்தின் தற்போதைய உற்பத்தி 13,300 மெட்ரிக் டன்களாக மட்டுமே உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் ரூ.127.71 கோடி செலவில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது. இந்த முதன்மை திட்டத்தின் மூலம் இரண்டு நவீன தொழில்நுட்ப மையங்கள் ஏற்படுத்தப்படும். இந்நவீன

தொழில்நுட்ப மையங்களில் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடற்பாசியிலிருந்து மதிப்புக்கூட்டிய பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்ற தொழில்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பல்நோக்கு கடற்பாசி பூங்கா திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் கடற்பாசி உற்பத்தி மற்றும் கடற்பாசியிலிருந்து மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை புகுத்தி அதிக அளவில் கடற்பாசி உற்பத்தி செய்வதுடன், கடற்பாசியிலிருந்து தரம் உயர்ந்த மதிப்புக்கூட்டிய பொருட்கள் உற்பத்தி செய்வது உறுதி செய்யப்படும். இத்திட்டத்தின் மூலம் குறிப்பாக தென் தமிழ்நாடு கடலோர மாவட்டங்களைச் சார்ந்த மீனவ மக்களுக்கு சுய தொழில் வேலை வாய்ப்புகளை அதிகரித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 5.6.5 கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பு

கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பதன் மூலம் விலை மதிப்புமிக்க மீன்களின் உற்பத்தியினை அதிகரிக்கலாம். கடல் விரால் (Cobia), கொடுவா (Sea bass), கலவா (Grouper), பாம்பனோ பாறை (Silver pompano) மற்றும் சிங்கி இறால் (Lobster) போன்ற

வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்களை கூண்டுகளில் வளர்த்திட இயலும். பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் 384 மிதவை கூண்டுகள் ரூ.16.56 கோடி செலவில் கடலோர மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், ரூ.2.50 கோடி செலவில் 50 மிதவை கூண்டுகள் கடலோர மீனவர்களுக்கு வழங்கிட அரசிடமிருந்து நிருவாக ஒப்புதல் பெறப்பட்டதன் அடிப்படையில், மேற்படி மிதவை கூண்டுகளை கடலோர மீனவர்களுக்கு வழங்கி, அண்மை கடல் பகுதியில் மிதவை கூண்டில் மீன்வளர்ப்பினை மேற்கொண்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6. உள்நாட்டு மீன்வள மேம்பாடு

தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளம் வளர்ந்து வரும் துறையாகவும், இனிவரும் ஆண்டுகளில் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றவுள்ளது. உள்நாட்டு மீன்வளம் மாநிலத்தின் உணவு உற்பத்தியில் மிக முக்கிய அம்சமாக செயல்பட்டு வருவதோடு, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி, உணவு பாதுகாப்பினையும் உறுதி செய்து வருகிறது. உள்நாட்டு மீன் உற்பத்தி தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியினை

அதிகரிக்கவும், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், வேலை வாய்ப்பினை பெருக்கிடவும் முக்கிய பங்காற்றுகிறது.

உள்நாட்டு மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு :

1. தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து மீன்வளர்ப்போருக்கு வழங்குதல்.
2. மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்தல்.
3. உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை முழுமையாக பயன்படுத்துதல்.
4. உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் செயற்கைகோள் வாயிலாக குறியீடு செய்து மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தித் திறனை கண்டறிதல்.
5. மீன்வளர்ப்புப் பண்ணைகளை அதிகரித்தல்.
6. மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்தல்.
7. மீன்உற்பத்தியினை இருமடங்காக்கி அதன் மூலம் மீன்வளர்ப்போரின் வருவாயினை அதிகரித்தல்.

8. தகுதியான அனைத்து நீர்நிலைகளிலும் அறிவியல் பூர்வமாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்து மீன்வளர்ப்பு மேற்கொண்டு, உணவு பாதுகாப்பினை உறுதி செய்தல்.

9. உள்நாட்டு மீன்வள ஆதாரங்களை பாதுகாத்தல், முறையாக பராமரித்தல், மீன்வள ஆதாரங்களை பெருக்குதல் மற்றும் வெளிநாட்டு மீன்இனங்கள் ஊடுருவுவதை கண்காணித்தல் மற்றும் தடை செய்தல்.

10. ஊரகப் பகுதி மக்களுக்கு நவீன மீன்வளர்ப்பு முறைகளை அறிமுகம் செய்து, சுய வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் சுகாதாரமான மீன் விற்பனை வசதிகளை ஏற்படுத்துதல்.

11. புரதம் மிகுந்த மீன் உணவினை வழங்குவது மற்றும் தரமான மீன் உணவு கிடைப்பதை உறுதி செய்தல்.

## 6.1 உள்நாட்டு மீன்வளத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

தமிழ்நாட்டில் 3.85 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள் அமைந்துள்ளன. இந்த மீன்வள ஆதாரங்கள்

பெரும்பாலும் பருவமழையை நம்பி உள்ளன. குறைந்த மழை அளவு, மீன்களின் இனப்பெருக்க காலத்திற்கும், பருவமழை காலத்திற்கும் உள்ள வேறுபாடுகளால் மீன்குஞ்சு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மேலும், நீர்நிலைகளில் குறைவான கால அளவே நீர் நிறைந்திருத்தல், குறைந்த செலவில் மீன்தீவனம் கிடைக்கப்பெறாமை ஆகியவை உள்நாட்டு மீன் உற்பத்தியினை பாதிக்கும் காரணிகளாகும்.

மேற்கூறப்பட்ட சவால்களை எதிர்கொண்டு உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கிட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை பின்வரும் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

1) நீர்த்தேக்கங்கள் மற்றும் பாசனக் குளங்களில் மிதவை கூண்டுகளில் தீவிர மீன்வளர்ப்பு மூலம் உள்நாட்டு மீன்உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் மிதவை கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்த்தல் மூலம் தரமான மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்தல்.

2) பல்வேறு துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்வளர்ப்பிற்குத் தகுதியான நீர்நிலைகளில் அறிவியல் பூர்வமாக மீன்குஞ்சுகள் இருப்பு செய்து உள்நாட்டு மீன்உற்பத்தியினை அதிகரித்தல்.

3) தீவிரமுறை மீன்வளர்ப்பு தொழில்நுட்பத்தினை பரவலாக்கிட மானியம் வழங்குதல் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கி மீன்வளர்ப்போரின் வருவாயினை பெருக்குதல்.

4) சுற்றுச்சூழலுக்குகந்த மீன்வளர்ப்பு முறைகளை பிரபலப்படுத்தி, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புடன் மீன்வளர்ப்பினையும் ஒருங்கிணைத்து விவசாயிகளின் வருவாயினை பெருக்குதல்.

5) பரவலான மற்றும் தீவிர மீன்வளர்ப்பிற்கு உகந்த மாற்றுமுறை மீன்வளர்ப்பு முறைகளுக்கு பொருத்தமான மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு மற்றும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்வளர்ப்பு முறைகளை ஊக்குவித்தல்.

6) ஊரக பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும்பொருட்டு மீன்வளர்ப்பு மற்றும் மீன்குஞ்சு வளர்ப்புக் குழுக்களை ஏற்படுத்துதல்.

7) தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள அரசு மீன் உணவு உற்பத்தி ஆலை மூலம் தரமான மீன்உணவு அரசு மீன்பண்ணைகளுக்கும் மற்றும் தனியார் மீன்பண்ணைகளுக்கும் விநியோகித்தல்.

8) தரமான மீன்குஞ்சு உற்பத்தியினை உறுதி செய்திட மேட்டூர் மற்றும் பவானிசாகர் அரசு மீன்பண்ணைகளில் நல்விதை தேர்வு (Pureline) சினைமீன் வளர்த்தெடுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

9) உயிர்கூழ்ம முறை (Biofloc) தொழில்நுட்பத்தின் மூலம் தீவிர மீன்வளர்ப்பு முறைகளில் மீன் உற்பத்தித் திறனை அதிகரித்து, நிலையான மீன்வளர்ப்பு முறைகள் மூலம் மீன்வளர்ப்போர் அதிக இலாபம் ஈட்டிட ஊக்குவிக்கப்படுகிறது.

10) நீர் மறுசுழற்சி முறை மீன்வளர்ப்புத் தொழில்நுட்பத்தின் மூலம் குறைந்த அளவு நீரினை பயன்படுத்தி தீவிர மீன்வளர்ப்பு மேற்கொள்ள மீன்வளர்ப்போருக்கு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.2 மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாடு அரசு மீன்வளர்ப்பினை பரவலாக்கிடவும், ஊரக பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், தமிழ்நாட்டில் சென்னை தவிர 38 மாவட்டங்களில் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை ஏற்படுத்தி திறம்பட செயல்படுத்தி வருகிறது. இந்த மாவட்ட மீன்வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட

ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் முக்கிய செயல்பாடுகளான, விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சியளித்தல், மீன்வளர்ப்பிற்குத் தேவையான மானியங்களை அளித்து மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் விரிவாக்க உதவி அளித்தல் போன்ற முக்கிய பணிகளை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மேற்கொண்டு வருகின்றன. மாவட்டத்திலுள்ள மீன்குஞ்சு பொரிப்பகங்கள், மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் மற்றும் மீன்பண்ணைகளை பதிவு செய்து பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் மீன்வளர்போருக்கு மானிய உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

## 6.3 நீர்த்தேக்க மீன்வள மேலாண்மை

தமிழ்நாட்டில் மொத்தம் 62 நீர்த்தேக்கங்களின் மீன்வள மேலாண்மை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. அவற்றில் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட 54 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலும், 8 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின்

கட்டுப்பாட்டிலும் உள்ளன. மேற்படி 62 நீர்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தியினை பெருக்குதல், நீர்த்தேக்கங்களை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவர்களின் வருவாயை அதிகரித்தல் ஆகியன நீர்த்தேக்க மீன்வள மேலாண்மையின் முக்கிய நோக்கங்களாகும்.

2) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை பொது ஏல ஒப்பந்த புள்ளி அடிப்படையில் மீன்வளர்ப்போருக்கு குத்தகைக்கு விடப்படுகிறது. மீன்பிடி உரிமம் வழங்குதல் மற்றும் பங்கு மீன்பிடிப்பு முறைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3) 2021–22 ஆம் ஆண்டில் 39 நீர்த்தேக்கங்களின் மீன்பாசி குத்தகை மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்டு, மீன்பாசி குத்தகையின் மூலம் ரூ.9.68 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

4) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் சிறப்பு முயற்சியாக மீன்வளர்ப்பிற்கு உகந்த இதர

நீர்தேக்கங்களிலும் மீன்வள மேலாண்மையினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.4 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

தமிழ்நாட்டில் 11 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மீன்குஞ்சு உற்பத்தி விவரம் (2022–23) அட்டவணை.5 இல் கொடுக்கப்பட்டுள்ளது

**அட்டவணை.5**

| வ. எண் | மாவட்டம் | மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் | மீன்குஞ்சு உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | மணிமுத்தாறு | 1495.00 |
| 2. | தஞ்சாவூர் | கரந்தை, தட்டான்குளம் | 727.00 |
| 3. | திருவாரூர் | நல்லிக்கோட்டை | 50.50 |
| 4. | கரூர் | திருக்காம்புலியூர் | 367.00 |
| 5. | ஈரோடு | பவானிசாகர் | 1920.00 |
| 6. | சேலம் | மேட்டூர் | 1872.00 |
| 7. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி (கிப்ட் திலேப்பியா) | 60.00 |

| வ. எண் | மாவட்டம் | மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் | மீன்குஞ்சு உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 8. | திருவள்ளூர் | பூண்டி | 276.80 |
| 9. | தேனி | மஞ்சளாறு (கிப்ட் திலேப்பியா) | 4.12 |
| 10. | திருவண்ணாமலை | சாத்தனூர் * | 122.50 |
| | | **மொத்தம்** | **6894.92** |

* தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

அரசு மீன் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை திறம்பட மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2022–23ஆம் ஆண்டில் அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மூலம் 68.90 கோடி நுண் மீன்குஞ்சுகள் (Early fry) உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தனியார் மூலம் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திடவும், தனியார் பண்ணையாளர்களை ஊக்குவித்து மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

மாநிலத்தின் பெரும்பாலான நீர்நிலைகளில் குறைவான அளவு நீர் இருப்பினை கருத்தில் கொண்டு வேகமாக வளரும் மீன் இனங்களை குறுகிய கால

நீர்நிலைகளில் இருப்பு செய்திடும் நோக்குடன் மாநிலத்திலேயே முதன் முறையாக மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா (GIF Tilapia) மீன்குஞ்சு பொரிப்பகத்தினை கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணையில் அமைத்து, ஆண்டொண்றிற்கு 25 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி திறனுடன் திறம்பட செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் தரமான மீன்குஞ்சுகள் மாநிலத்திலுள்ள மீன்வளர்ப்போருக்கும் மற்றும் அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்திட, குறிப்பாக தென்மாவட்டங்களின் தேவையினை பூர்த்தி செய்திட தமிழ்நாடு அரசு மேலும் ஒரு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகத்தினை உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் ஆண்டொண்றிற்கு 15 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி திறனுடன் தேனி மாவட்டம் மஞ்சளாறு அணை அரசு மீன் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வேகமாக வளரும் திலேப்பியா மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன்வளர்போருக்கு நியாயமான விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## 6.5 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் 39 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலமும், 5 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் மூலமும் செயல்பட்டு வருகின்றன. 2022–23ஆம் ஆண்டில் மொத்தம் 8.84 கோடி தரமான மீன் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. வளர்த்தெடுக்கப்பட்ட மீன் விரலிகள் நீர்த்தேக்கங்களிலும், பாசன குளங்களிலும் மற்றும் தனியார் மீன்பண்ணைகளிலும் இருப்பு செய்யப்பட்டதன் காரணமாக மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் விபரம் அட்டவணை 6–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

# அட்டவணை-6

## அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களின் மீன்விரலிகள் உற்பத்தி விபரம் (2022-23)

| வ. எண் | மாவட்டம் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை,<br>சிற்றார் – I,<br>சிற்றார் – II | 13.96 |
| 2 | திருநெல்வேலி | மணிமுத்தாறு,<br>கூனியூர் | 58.56 |
| 3 | தென்காசி | கடானா | 20.42 |
| 4 | தேனி | வைகை,<br>மஞ்சளாறு | 49.90 |
| 5 | சிவகங்கை | பிரவலூர் | 15.12 |
| 6 | விருதுநகர் | பிளவக்கல் | 13.73 |
| 7 | திண்டுக்கல் | அணைப்பட்டி | 28.06 |
| 8 | புதுக்கோட்டை | தட்டமனைப்பட்டி,<br>குறுங்களூர்,<br>கருவிடைச்சேரி | 13.75 |
| 9 | தஞ்சாவூர் | நெய்தலூர்,<br>அகரப்பேட்டை,<br>கரந்தை-<br>திருமங்கலக்கோட்<br>டை | 88.18 |
| 10 | திருவாரூர் | நல்லிக்கோட்டை | 9.9 |
| 11 | திருச்சி | அசூர், குளித்தலை | 11.94 |
| 12 | கரூர் | திருக்காம்புலியூர் | 14.49 |

| வ. எண் | மாவட்டம் | அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் | மீன்விரலிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 13 | ஈரோடு | பவானிசாகர் | 129.44 |
| 14 | சேலம் | மேட்டூர்,<br>ஆணைமடுவு | 113.35 |
| 15 | தருமபுரி | ஒகேனக்கல்,<br>சின்னாறு | 61.06 |
| 16 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி,<br>பாம்பாறு,<br>கெலவரப்பள்ளி | 127.05 |
| 17 | வேலூர் | மோர்தானா | 8.67 |
| 18 | விழுப்புரம் | வீடூர் | 10.50 |
| 19 | கடலூர் | லால்பேட்டை, அகரம் | 29.62 |
| 20 | திருவள்ளூர் | பூண்டி | 23.15 |
| 21 | காஞ்சிபுரம் | செம்பரம்பாக்கம் | 4.12 |
| 22 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 15.13 |
| | **மொத்தம்** | | **860.10** |
| **தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்** | | | |
| 23 | திண்டுக்கல் | பாலாறு – பொறந்தலாறு | 1.05 |
| 24 | திருப்பூர் | அமராவதி,<br>திருமூர்த்தி | 5.83 |
| 25 | கோயம்புத்தூர் | ஆழியாறு | 11.10 |
| 26 | திருவண்ணாமலை | சாத்தனூர் | 6.15 |
| | | **மொத்தம்** | **24.13** |
| | | **ஆக மொத்தம்** | **884.23** |

தமிழ்நாடு அரசு மீன்பண்ணையாளர்களை ஊக்குவித்து, தனியார் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களை அமைத்திட மானிய உதவிகளை வழங்கி வருகிறது. வடகிழக்கு பருவமழையில் நீர் கிடைக்கப்பெறும் பாசன குளங்களுக்கு தேவையான வளர்த்தெடுக்கப்பட்ட மீன் விரலிகள் கிடைத்திட ஏதுவாக மிதவைக் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு முறைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.6 நாட்டின மீன்வளத்தினை பாதுகாத்தல்

மாநிலத்தின் நாட்டின மீன் வகைகளை பாதுகாத்திட அரசு உறுதி பூண்டுள்ளது. நாட்டின மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து, நீர்நிலைகளில் இருப்பு செய்வதன் மூலம் நாட்டின மீன்வளத்தினை பெருக்கி பாதுகாத்திட சீரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மாநிலத்தின் நாட்டின மீன் இனங்களுக்கு அதிக தேவை உள்ளது. மருத்துவ குணங்கள் நிறைந்த நாட்டின மீன்கள் சுவையிற்சிறந்ததாகவும் விளங்குகின்றன. எனவே, உள்ளூர் மக்களாலும் அதிகம் விரும்பப்படுகின்றன. நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு முறைக்கு முக்கியத்துவம் அளிப்பது வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு உணவு பாதுகாப்பு அளிப்பதற்கான முக்கிய தீர்வாகக் கருதப்படுகிறது.

நாட்டின மீன்களின் பெருகிவரும் தேவையினை கருத்திற்கொண்டு கரிமீன் (*Etroplus suratensis*), கல்பாசு (*Labeo calbasu*) மற்றும் சேல் கெண்டை (*Labeo fimbriatus*) போன்ற நாட்டின மீன் வகைகளை உற்பத்தி செய்து, புரதம் நிறைந்த மீன் உணவினை ஊரக பகுதிகளில் வழங்கிட இயலும். இதற்கென சேலம், தஞ்சாவூர் மற்றும் கடலூர் ஆகிய 3 மாவட்டங்களில் ரூ.4.40 கோடி மதிப்பில் நாட்டின மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகளை நிறுவிட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனை செயல்படுத்திட கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை அரசு மீன்பண்ணையில் ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் கரி மீன்குஞ்சு பொரிப்பகம், தஞ்சாவூர் மாவட்டம், அகரப்பேட்டை அரசு மீன்பண்ணையில் ரூ.1.64 கோடி மதிப்பீட்டில் கல்பாசு கெண்டை மீன்குஞ்சு பொரிப்பகம் மற்றும் சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு மீன்பண்ணையில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் சேல் கெண்டை மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைக்கப்பட்டவுடன் உள்நாட்டு மீனவர்களுக்கு நாட்டின மீன்வளத்தினை பாதுகாப்பது தொடர்பான உரிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. மேலும், நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்களில் உற்பத்தி செய்யப்படும்

மீன் குஞ்சுகள், நாட்டின மீன் வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு, மாநிலம் முழுவதும் சுவையான நாட்டின மீன்கள் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மீன்வளர்ப்பு விவசாயிகளுக்கு நல்ல லாபம் ஈட்டி தரும் என்பது திண்ணமாகும்.

## 6.7 ஆறுகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல்

மாநிலத்திலுள்ள ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்புச் செய்வதன் மூலம் தமிழ்நாட்டின் நாட்டின மீன் வளத்தை மீட்டெடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டின மீன்களை பாதுகாத்து பெருக்குவதன் மூலம் நீர்நிலைகளை ஒட்டி வாழும் உள்நாட்டு மீனவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தினை மேம்படுத்திடலாம். தமிழ்நாட்டில் ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்திடும் திட்டம் ரூ.1.24 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 40 இலட்சம் நன்கு வளர்ந்த விரலிகள் காவேரி, பவானி மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகளிலும், அதன் கிளை ஆறுகளிலும் இருப்பு செய்யப்பட்டுள்ளன. ஆறுகளில் நாட்டின மீன்குஞ்சுகளை இருப்பு செய்திடும் திட்டத்தின் கீழ் நாட்டின மீன்குஞ்சு பொரிப்பகங்களில் மீன்குஞ்சுகள்

உற்பத்தி செய்யப்பட்டு, மீன்விரலிகளாக வளர்த்தெடுக்கப்பட்டு ஆறுகளில் இருப்பு செய்யப்பட்டு அதன் மூலம் மீன் உற்பத்தி அதிகரித்திடும்.

## 6.8 தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் (2021-22)

### 6.8.1 பண்ணைகுட்டைகளில் கூட்டு மீன்வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பினை ஊக்குவித்தல் திட்டம்

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-22ன் கீழ் தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகளால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பண்ணைகுட்டைகளை புனரமைத்திடவும் மற்றும் கூட்டு மீன்வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை மீன்களுடன் நன்னீர் இறால் வளர்ப்பினை மேற்கொள்ள உள்ளீட்டு மானியமாக ரூ.25.25 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 6.8.2 பண்ணைகுட்டைகளில் நீர் சேமிப்புத் திறனை மேம்படுத்திட பாலித்தீன் உறைகளிட்டு மீன் வளர்த்தல் திட்டம்

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-22ன் கீழ் தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகளால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பண்ணைகுட்டைகளை

புனரமைத்திடவும், பாலித்தீன் உறையிடுதல் மற்றும் மீன் வளர்த்திட ஆகும் உள்ளீட்டு செலவினத்திற்கான மானிய தொகையாக ரூ.75.75 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 6.8.3 விரால் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட உள்ளீட்டு மானியம் வழங்குதல் திட்டம்

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2021-22ன் கீழ் தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள பயனாளிகளால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பண்ணைகுட்டைகளை புனரமைத்திடவும் மற்றும் விரால் மீன்வளர்ப்பு செய்திட ஆகும் உள்ளீட்டு செலவினத்திற்கான மானிய தொகையாக ரூ.30.30 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

### 6.8.4 கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் அரசு மீன்பண்ணையில் கிப்ட் திலேப்பியா மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைத்தல்

கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் அரசு மீன்பண்ணையில் கிப்ட் திலேப்பியா மீன்குஞ்சு உற்பத்தி வளப்பு அமைக்க தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021-22ன் கீழ் ரூ.4.50 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.

### 6.8.5 சேலம் மாவட்டம், ஆணைமடுவு அரசு மீன்பண்ணையினை மேம்படுத்துதல்

சேலம் மாவட்டம், ஆணைமடுவு அரசு மீன்பண்ணையினை மேம்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021–22ன்கீழ் ரூ.70 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமான பணிகள் நிறைவுற்றுள்ளது.

### 6.8.6 கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு–2 அரசு மீன்பண்ணையினை மேம்படுத்துதல்

கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு–2 அரசு மீன்பண்ணையினை மேம்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021–22ன் கீழ் ரூ.32 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளது.

### 6.8.7 கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன்பண்ணையினை மேம்படுத்துதல்

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அரசு மீன்பண்ணையினை மேம்படுத்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் 2021–22ன் கீழ் ரூ.20 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளது.

### 6.8.8 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (2020–21) அரசு மீன்விதை வங்கிகள் அமைத்தல்.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020–21 ன் கீழ் கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் தென்காசி மாவட்டம், இராமநதி ஆகிய இடங்களில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மீன்விதை வங்கிகள் அமைக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளன.

### 6.8.9 ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டம்

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020–21ன் கீழ் மேட்டூர், பவானிசாகர், சாத்தனூர், வீராணம் மற்றும் சிற்றாறு ஆகிய 5 நீர்த்தேக்கங்களில் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள மேம்பாட்டுத் திட்டம் ரூ.11.08 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 6.8.10 புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020–21 ன் கீழ் பயனாளிகள் மூலம் தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் 2 நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திட ரூ.25 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர்

மாவட்டத்தில் பணிகள் முடிவுற்றுள்ளது மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

### 6.8.11 புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்புக் குளம் மற்றும் உள்ளீட்டு மானியம் வழங்குதல்.

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020–21 ன் கீழ் 10 ஹெக்டேர் பரப்பளவில் புதிய நன்னீர் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் அமைத்திட, ரூ.32.20 இலட்சம் பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.8.12 புதிய நன்னீர் மீன்வளர்ப்பு குளம் அமைத்தல்

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020–21 ன் கீழ் 100 ஹெக்டேர் பரப்பளவில் புதிய நன்னீர் மீன்வளர்ப்பு பண்ணைகள் அமைத்திட ரூ.3.22 கோடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.8.13 நன்னீர் மீன்வளர்ப்பு குளங்களுக்கு உள்ளீட்டு மானியம் வழங்குதல்

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020–21 ன் கீழ் 100 ஹெக்டேர் பரப்பளவில் நன்னீர் மீன்வளர்ப்பு பண்ணைகளுக்கு ரூ.1.84 கோடி உள்ளீட்டு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.8.14 உயிர்கூழ்ம (Biofloc) குளங்கள் (நடுத்தர அலகு) அமைத்தல் மற்றும் உள்ளீட்டு மானியம் வழங்குதல்

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-21 ன் கீழ் 15 அலகு பயோபிளாக் குளங்கள் அமைத்தல் மற்றும் உள்ளீட்டு மானியமாக ரூ.98 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 6.8.15 நீரினை மறுசுழற்சி முறையில் தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு மானியம் வழங்குதல்

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-21ன் கீழ் 20 அலகு, நீரினை மறுசுழற்சி முறையில் தொட்டிகள் அமைத்து நன்னீர் மீன்வளர்ப்பு மேற்கொள்ள மானியமாக ரூ.69 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 6.8.16 உயிர்கூழ்ம (Biofloc) குளங்கள் (சிறிய அலகு) அமைத்தல் மானியம் வழங்குதல்

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2020-21ன் கீழ் 10 அலகு, சிறிய அளவிலான பயோபிளாக் குளங்கள் அமைத்தல் மற்றும் உள்ளீட்டு மானியமாக ரூ.34.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 6.9 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2021–22)

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2021–22ன் கீழ் பின்வரும் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய பின்வரும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**அட்டவணை–7**

| வ. எண் | திட்டங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | புதிய நன்னீர் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல் | 8 எண்ணம் | 200.00 |
| 2. | புதிய மீன்குஞ்சு வளர்ப்பு தொட்டிகள் அமைத்தல் | 40 ஹெக்டேர் | 280.00 |
| 3. | மீன்வளர்ப்பு குளம் அமைத்தல் | 85 ஹெக்டேர் | 595.00 |
| 4. | மீன்வளர்ப்பிற்கான உள்ளீட்டுகள் | 85 ஹெக்டேர் | 340.00 |
| 5. | நன்னீர் உயிர்கூழ்ம (பயோபிளாக்) மீன்வளர்ப்பு தொட்டிகள் அமைத்தல் | 100 எண்ணம் | 750.00 |
| 6. | நாட்டின மீன் இனங்களை ஆறுகளில் இருப்பு செய்தல் | 40 இலட்சம் மீன்குஞ்சுகள் | 124.00 |
| | | **மொத்தம்** | **2289.00** |

## 6.10 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் (2022–23)

பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் 2022–23ன் கீழ் உள்நாட்டு மீன்வளம் தொடர்புடைய பின்வரும் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது:

**அட்டவணை–8**

| வ. எண் | திட்டங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மீன்வளர்ப்பு குளம் அமைத்தல் | 10 ஹெக்டேர் | 70.00 |
| 2. | மீன்வளர்ப்பிற்கான உள்ளீட்டுகள் | 10 ஹெக்டேர் | 40.00 |
| | | **மொத்தம்** | **110.00** |

## 6.11 பல்நோக்கு பண்ணை குட்டைகளில் மீன்வளர்ப்பினை ஊக்குவித்திட மாநில நிதி 2022–23–ன் கீழ் உள்ளீட்டு மானியம் வழங்குதல்

பல்நோக்கு பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பினை ஊக்குவித்திட மீன்வளர்ப்போருக்கு உள்ளீட்டு மானியம் வழங்கிடும் திட்டத்தினை அரசு ரூ.1 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 550 பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பினை மேற்கொள்ள மீன்வளர்ப்பிற்கான உள்ளீட்டு பொருட்களான

மீன்குஞ்சு, தீவனம் மற்றும் உரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாய் கணிசமாக அதிகரிப்பதோடு, மாநிலத்தின் உள்நாட்டு மீன்உற்பத்தியும் அதிகரித்திடும்.

## 6.12 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம். தமிழ்நாட்டில் 66 உபவடிநில பகுதிகளில் 2018–19 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நீண்ட கால மற்றும் குறுகிய கால பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல், பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு மற்றும் மண்ணாலான மீன்குஞ்சு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணை அமைத்தல் ஆகிய முக்கியமான திட்டங்கள், ஏற்கனவே உள்ள நீரினைப் பயன்படுத்தி மீன் உற்பத்தியினை பெருக்கிட செயல்படுத்தப்படுகிறது. மேலும், வேகமாக வளரும் மீன் இனங்கள் மற்றும் அதிக மதிப்புள்ள மீன் இனங்களை வளர்க்கும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயனாளிகளின் வருமானம் இரட்டிப்பாகிறது.

இத்திட்டத்தின் கீழ் பல்வேறு கட்டங்களாக உள்நாட்டு மீன்வளத் திட்டங்களை திறம்பட

செயல்படுத்திட, தமிழ்நாடு அரசு ரூ.39.50 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 2018–19 முதல் 2021–22 வரை ரூ.30.76 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு, பயனாளிகளுக்கு தரமான மீன்குஞ்சுகளை வழங்குவதற்காக பவானிசாகர் மற்றும் மேட்டூர் அணை அரசு மீன்பண்ணைகளில் நல்விதை தேர்வு சினைமீன் உற்பத்தி மற்றும் பராமரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் மீன்குஞ்சு உற்பத்தியை மேம்படுத்த மஞ்சளாறு அணையில் வேகமாக வளரக்கூடிய கிப்ட் திலேப்பியா பொரிப்பகம் அமைத்தல் மற்றும் கடலூர் மாவட்டத்தில் லால்பேட்டை, அகரம் ஆகிய அரசு மீன்பண்ணைகளை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 26,396 ஹெக்டேர் பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டன மற்றும் 1,027 பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க 85 மண்ணாலான மீன்குஞ்சு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர 100 அலகு கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் 15 அலகு மிதவைக்கூடுகளில் மீன்வளர்ப்பு

திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித் திறனை அதிகரிக்க 495 எண்ணம் மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மீன்விற்பனை சந்தையை மேம்படுத்த 18 நவீன மீன்விற்பனை அங்காடிகள் உபவடி நிலப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

2022–23–ம் ஆண்டில் ரூ.6.43 கோடி மதிப்பில் பின்வரும் மீன்வளத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது:

**அட்டவணை –9**

**தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

| வ எண் | திட்டங்கள் | அலகுகள் எண்ணிக்கையில் |
|---|---|---|
| 1 | நீண்ட கால மற்றும் குறுகிய கால பாசன நீர்நிலைகளில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் | 743 ஹெக்டேர் |
| 2 | பண்ணைக்குட்டைகளில் மீன்வளர்ப்பு | 231 |
| 3 | மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல் | 20 |
| 4 | மண்ணாலான மீன்குஞ்சு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணை அமைத்தல் | 3 |
| 5 | நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல் | 6 |
| 6 | நாகப்பட்டினத்தில் அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைத்தல் | 1 |

| வ எண் | திட்டங்கள் | அலகுகள் எண்ணிக்கையில் |
|---|---|---|
| 7 | மடித்து எடுக்கக்கூடிய தொட்டிகளில் மீன்வளர்த்தல் | 40 |
| 8 | மாதிரி கிராமத் திட்டங்கள் | 11 |

## 6.13 வண்ண மீன் வளர்ப்பு

தமிழ்நாடு, வண்ண மீன் ஏற்றுமதியில் நாட்டில் இரண்டாவது மாநிலமாக திகழ்கிறது. வண்ண மீன் உற்பத்தியை அதிகரித்திடவும், அதன் வாயிலாக வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் ரூ.4.70 கோடி திட்ட மதிப்பீட்டில், முன்னோடி திட்டமாக வண்ணமீன் வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.1.5 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.0.75 கோடி என மொத்தம் ரூ.2.25 கோடி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த வண்ண மீன் வளர்ப்பு பண்ணைகள் புதிதாக அமைத்தல்/ புனரமைத்தல், நீர்த்தாவரம் வளர்த்தல் மற்றும் வண்ண மீன் வளர்ப்பு உபகரணங்களுக்கான விற்பனை நிலையம் அமைத்தல், வண்ண மீன் வளர்ப்பு தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே வண்ண மீன் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட ஏதுவாக பள்ளி மற்றும்

கல்லூரிகளில் வண்ண மீன் தொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு, ஒருங்கிணைந்த வண்ண மீன்வளர்ப்பு மேற்கொள்ள ரூ.13.85 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, வண்ண மீன் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் வண்ண மீன் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தினை அதிகரிக்கும் நோக்கில், சென்னை, கொளத்தூர் பகுதியில் ரூ.50 கோடி செலவில் வண்ணமீன் வர்த்தக மையம் அமைக்கப்படும் என அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்காக, அமைந்தகரை தாலுக்கா, வில்லிவாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலுக்குரிய இடம் 3.94 ஏக்கர் மற்றும் அயனாவரம் தாலுக்கா, பெரவளூர் கிராமம், அருள்மிகு செல்லியம்மன் கோவிலுக்குச் சொந்தமான 4,785 சதுரஅடி இடம் ஆகியவை முறையே வண்ணமீன் வர்த்தக மையம் மற்றும் நிர்வாக அலுவலகத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 7. மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மீன் இறங்கும் பகுதிகளை மேம்படுத்தி, மீன் இறங்கு தளங்களை தரம் உயர்த்தி, புதிய மீன்பிடித் துறைமுகங்களை உலகளாவிய தரத்திற்கு உருவாக்குவதன் மூலம் மீன்பிடி படகுகளை பாதுகாப்பாக நிறுத்திடவும், மீன்களை சுகாதாரமான முறையில் கையாளவும் பல்வேறு நிதி ஆதாரங்களின் உதவி பெற்று மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு, நுகர்வோருக்கு தரமான மீன்களை வழங்குவதற்கான பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. இதன் மூலம் ஏற்றுமதி மதிப்பு உயர்வதோடு மீனவர்களுக்கு அதிக வருவாய் ஈட்டிடவும் உதவுகிறது. மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுவதால் மீனவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறுவதுடன், அவர்களின் வாழ்வாதாரமும் மேம்படும்.

## 7.1 புதிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைத்தல் மற்றும் கட்டப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்களை மேம்படுத்துதல்

### 7.1.1 சென்னை மாவட்டம் திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

சென்னை மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் ரூ.200 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடி துறைமுகம் 510மீ நீளம், வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 849மீ நீளம் தெற்கு அலை தடுப்புச்சுவர்களுடன் சூரை மீன்கள் மற்றும் ஆழ்கடல் மீன்கள் சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

### 7.1.2 விழுப்புரம் மாவட்டத்தில் அழகன்குப்பம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆலம்பரைகுப்பம் மீன்பிடி துறைமுகம் கழுவேலி ஆற்றின் கரையோரங்களில் அமைத்தல்

விழுப்புரம் மாவட்டத்தில் அழகன்குப்பம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில், ஆலம்பரைகுப்பம் மீன்பிடித் துறைமுகம்

கழுவேலி ஆற்றின் கரையோரங்களில் அமைக்க ரூ.235 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மாநில கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம், நிலைபடுத்தும் சுவர் 900மீ நீளம், படகு அணையும் சுவர் 1,100 மீ நீளம், கடற்கரை பாதுகாப்பு கட்டமைப்பு 300மீ நீளம், சாய்வு தளம் 2 எண்ணம், கரைகளை பலப்படுத்தும் பணி 400மீ நீளம், தூர்வாருதல் மற்றும் சமன்படுத்துதல் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.1.3 கடலூர் மாவட்டம், முதுநகர் மீன்பிடித் துறைமுகத்தினை புனரமைத்தல்.

கடலூர் மாவட்டம், முதுநகரில் மீன்பிடித் துறைமுகத்தினை புனரமைக்கும் பணிக்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கூடுதல் வசதிகளுடன் படகு அணையும் சுவர் 1,040மீ நீளம்,

தடுப்புச்சுவர் 600மீ நீளம் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப் பட்டுள்ளது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

### 7.1.4 மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் ரூ.120 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடி துறைமுகம் 340மீ நீளம் வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 1,070மீ நீளம் தெற்கு தடுப்புச் சுவர்களுடன் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

### 7.1.5 மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்துதல்

மயிலாடுதுறை மாவட்டம், பழையார் மீன்பிடி துறைமுகத்தை மேம்படுத்தும் பணிக்காக ரூ.26.26 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில அரசால்

நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 180மீ நீளத்தில் படகு அணையும் தளம், 80மீ நீளத்தில் தடுப்புச்சுவர், 30 மெட்ரிக் டன் கொள்ளளவில் பனிக்கட்டி உற்பத்தி ஆலை மற்றும் கரையோர வசதிகளுடன் மேம்படுத்தப்படுகிறது. ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.1.6 நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் நவீன வசதிகளுடன் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்த மீன்பிடித் துறைமுகம் 1,080மீ நீளம் வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 1,300மீ நீளம் தெற்கு அலைத்தடுப்புச்சுவர், 240மீ நீளம் படகு அணையும் தளங்களுடன் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 33% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.1.7 நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ரூ.150 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வடக்கு அலைத் தடுப்புச்சுவர் 1,650மீ நீளம், தெற்கு அலைத் தடுப்புச்சுவர் 2,000மீ நீளம், படகு அணையும் தளம் 340மீ நீளம், தூர்வாருதல், சமன்படுத்துதல் மற்றும் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர உட்கட்டமைப்பு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, 62% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.1.8 இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர்காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடி துறைமுகத்தில் மீன்பிடிப்பிற்கு முந்தைய மற்றும் பிந்தைய தொடர் குளிர்காப்பு வசதிகள் மற்றும் ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்புகள் அமைக்க ரூ.20 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ளது. 25% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.1.9 தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் படகு அணையும் தளம் அமைப்பதன் மூலம் கூடுதல் படகு நிறுத்தும் வசதிகளை அமைத்தல்

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தில் படகு அணையும் தளம் அமைப்பதன் மூலம் கூடுதல் படகு நிறுத்தும் வசதிகளை அமைக்க ரூ.25 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 74% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.1.10 கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்பு சுவர் நீட்டிக்கவும் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்புவசதிகள்மேற்கொள்ளுதல்

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் பிரதான அலை தடுப்பு சுவரை நீட்டித்து, நவீனமயமாக்கிடும் பணி ரூ.253 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்படுத்தும் நிதி திட்டத்தின் கீழ் செயல்படுத்திட அரசால் நிருவாக அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய நீர் மற்றும் சக்தி ஆராய்ச்சி நிலையம் பூனே–வின் பரிந்துரையின்படி, பிரதான அலைத்தடுப்புச் சுவரினை 637 மீ நீளத்திற்கு நீட்டித்திடவும் மற்றும் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. 21% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**7.1.11 நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டை இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், திருநெல்வேலி மாவட்டம், உவரி, திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி ஆகிய நான்கு கடலோர மாவட்டங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகள்.**

நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தான்பேட்டை (ரூ.15 இலட்சம்) மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் (ரூ.1 கோடி), திருநெல்வேலி மாவட்டம், உவரி (ரூ.1 கோடி), திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு (ரூ.1 கோடி) மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், வாணியக்குடி (ரூ.1 கோடி) ஆகிய நான்கு

கடலோர மாவட்டங்களில் புதிய மீன்பிடி துறைமுகங்கள் அமைக்க, பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.1.12 கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடித் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தினை விரிவாக்கம் செய்திட பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகள்.**

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மீன்பிடித் துறைமுகம் (ரூ.1 கோடி) மற்றும் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தினை (ரூ.1 கோடி) விரிவாக்கம் செய்திட, பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும்

பணிகளுக்காக மொத்தம் ரூ.2 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.1.13 தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தை நவீனமயமாக்கிட மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடி துறைமுகத்தின் நிலைபடுத்தும் சுவரினை நீட்டிப்பு செய்திட பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகள்.**

தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தை நவீனமயமாக்கிட (ரூ.50 இலட்சம்) மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் மீன்பிடித் துறைமுகத்தின் நிலைபடுத்தும் சுவரினை நீட்டிப்பு செய்திட (ரூ.50 இலட்சம்) பல்வேறு ஆய்வு பணிகள் மேற்கொண்டு, அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.1 கோடி திட்ட மதிப்பீட்டில் மாநில நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக

ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

## 7.2 புதிய மீன் இறங்குதளங்கள் அமைத்தல் மற்றும் மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல்

### 7.2.1 கடலூர் மாவட்டம், அன்னன்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகளை அமைத்தல்

கடலூர் மாவட்டம், அன்னன்கோவில் மற்றும் முடசலோடை கிராமங்களில் உள்ள மீன் இறங்குதளத்தில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த ரூ.19.50 கோடி மதிப்பீட்டில், மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 54% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.2.2 கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைத்தல்

கடலூர் மாவட்டம், தாழங்குடாவில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.13.06 கோடிக்கு நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 88% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.2.3 கடலூர் மாவட்டம். புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள்.

கடலூர் மாவட்டம், புதுக்குப்பம் மற்றும் சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.13 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சி.புதுப்பேட்டையில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது. புதுக்குப்பத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

### 7.2.4 இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர், தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம், சின்னமேடு மற்றும் கொடியம்பாளையம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.

இராமநாதபுரம் மாவட்டம், ரோச்மாநகர் மற்றும் தங்கச்சிமடம், மயிலாடுதுறை மாவட்டம், சின்னமேடு மற்றும் கொடியம்பாளையம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடல் அரிப்பு தடுப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.21.62 கோடிக்கு, நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு,

பணிகள் நடைபெற்று வருகிறது. தங்கச்சிமடம் மீன் இறங்கு தளத்தில் 92% பணிகளும், சின்னமேடு மீன் இறங்கு தளத்தில் 64% பணிகளும் மற்றும் கொடியம்பாளையம் மீன் இறங்கு தளத்தில் 5% பணிகளும் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.2.5 மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தும் பணிகள்.

மயிலாடுதுறை மாவட்டம், திருமுல்லைவாசல், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், சிப்பிக்குளம், திரேஸ்புரம் மற்றும் கீழவைப்பார் மீன் இறங்குதளங்களை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.66 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. சிப்பிக்குளத்தில் 22% பணிகளும், கீழவைப்பாரில் 37% பணிகளும், திருமுல்லைவாசலில் 11% பணிகளும் மற்றும் சேதுபாவாசத்திரத்தில் 82% பணிகளும் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது. திரேஸ்புரத்தில் ஆரம்ப பணிகள் தொடங்கப்பட்டு உள்ளது,

### 7.2.6 மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி மீன் இறங்கு தளத்தை மேம்படுத்தும் பணிகள்.

மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி மீனவ கிராமத்தில் படகு அணையும் சுவர் 580மீ நீளம், நிலைபடுத்தும் சுவர்கள் தெற்கு மற்றும் வடக்கில் முறையே தலா 245மீ நீளம் (2 எண்ணம்), சிறிய நேர்கல் சுவர்கள் 50மீ நீளம் (2 எண்ணம்) மற்றும் 300மீ சாலை வசதிகளுடன் மீன் இறங்கு தளத்தினை மேம்படுத்தும் பணிக்காக ரூ.55 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஆரம்ப பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

### 7.2.7 நாகப்பட்டினம் மாவட்டம், சந்திரபாடி கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், சந்திரபாடி கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிக்காக ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.2.8 தஞ்சாவூர் மாவட்டம், கீழத்தோட்டம், மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி, புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம், வடக்கம்மாப்பட்டினம் மற்றும் புதுக்குடி ஆகிய கிராமங்களில் மீன்இறங்குதளம் அமைத்தல்

தஞ்சாவூர் மாவட்டம், கீழதோட்டம், மயிலாடுதுறை மாவட்டம், வானகிரி, புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம், வடக்கம்மாப்பட்டினம் மற்றும் புதுக்குடி ஆகிய கிராமங்களில் மீன்இறங்குதளம் அமைக்க ரூ.22 கோடி மதிப்பீட்டில் மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் வானகிரி மீன் இறங்குதளத்தில் 75% பணிகளும், கீழத்தோட்டம் மீன் இறங்குதளத்தில் 79% பணிகளும், கோட்டைப்பட்டினம், வடக்கம்மாப்பட்டினம் மற்றும் புதுக்குடி மீன் இறங்குதளங்களில் 65% பணிகளும் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.2.9 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் மீன் இறங்கு தளம் மற்றும் படகு அணையும் தளங்கள் அமைக்க ரூ.20 கோடிக்கு,

மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 94% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.2.10 இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்

இராமநாதபுரம் மாவட்டம், கீழமுந்தல் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 85% பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 7.2.11 இராமநாதபுரம் மாவட்டம், முள்ளிமுனை கிராமத்தில் மீன் இறங்கு தளத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல்.

இராமநாதபுரம் மாவட்டம், முள்ளிமுனை கிராமத்திலுள்ள மீன் இறங்குதளத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1.69 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 70% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.2.12 இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல் மீன் இறங்குதளத்தில் கரையோர வசதிகள் ஏற்படுத்துதல்.

இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல் மீன் இறங்குதளத்தில் கரையோர வசதிகள் ஏற்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.4 கோடி திட்ட மதிப்பீட்டில் சாகர்மாலா நிதித் திட்டத்தின் கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளது.

### 7.2.13 இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் உள்ள படகு அணையும் தளத்தை புனரமைத்து மேம்படுத்தும் பணிகள்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் உள்ள படகு அணையும் தளத்தை புனரமைத்து மேம்படுத்தும் பணிக்காக ரூ.22.77 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 200மீ நீளத்தில் அணுகுத் தளம் மற்றும் 150மீ நீளத்தில் படகு அணையும் ஜெட்டியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 28% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.2.14 தூத்துக்குடி மாவட்டம், ஜீவாநகர், அமலிநகர், ஆலந்தலை, மற்றும் மீனவர் காலனி (தெர்மல் – II அருகில்) மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள்.**

தூத்துக்குடி மாவட்டம் ஜீவா நகர், அமலிநகர், ஆலந்தலை மற்றும் மீனவர் காலனி (தெர்மல்–II அருகில்) ஆகிய இடங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்க ரூ.7 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் அமலிநகரில் 38% பணிகளும், ஆலந்தலையில் 54% பணிகளும் மற்றும் மீனவர் காலனி (தெர்மல்–II அருகில்)–யில் 76% பணிகளும் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.2.15 திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல்**

திருநெல்வேலி மாவட்டம், அருவிக்கரை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க ரூ.10 கோடிக்கு, மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.2.16 கன்னியாகுமரி மாவட்டம், கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளத்தை மேம்படுத்தும் பணிகள்.

கன்னியாகுமரி மாவட்டம், கோடிமுனை, சைமன் காலனி மற்றும் குறும்பனை ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளத்தை மேம்படுத்திட ரூ.100 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கோடிமுனையில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 160மீ மற்றும் 116மீ நீளங்களிலும், சைமன் காலனியில் இரண்டு நேர்கல் சுவர்கள் முறையே 163மீ மற்றும் 100மீ நீளங்களிலும் மற்றும் குறும்பனையில் ஒரு நேர்கல் சுவர் 100மீ நீளத்திலும் அமைக்க திட்டமிடப்பட்டது. இதில் கோடிமுனை மீன் இறங்குதளத்தில் 29% பணிகளும், சைமன் காலனி மீன் இறங்குதளத்தில் 31% பணிகளும், குறும்பனை மீன் இறங்குதளத்தில் 88% பணிகளும் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

## 7.3 முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்துதல் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள்

### 7.3.1 திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்துதல்

திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்த ரூ.26.85 கோடிக்கு, நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்ட நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.

### 7.3.2 செங்கல்பட்டு மாவட்டம், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம் மற்றும் ஆழிகுப்பம் கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள்.

செங்கல்பட்டு மாவட்டம், கொக்கிலமேடு, கடலூர் பெரியகுப்பம், கடலூர் சின்னகுப்பம் மற்றும் ஆழிகுப்பம் கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள் அமைக்கும் பணிகளுக்காக மொத்தம் ரூ.39 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ்

தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் தொடங்கப்பட்டுள்ளது.

**7.3.3 செங்கல்பட்டு மாவட்டம், பழையநடுக்குப்பம், புதுநடுக்குப்பம், கரிக்காட்டுகுப்பம், செம்மஞ்சேரி குப்பம் மற்றும் அங்காளம்மன்குப்பம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள்.**

செங்கல்பட்டு மாவட்டம், பழையநடுக்குப்பம், புதுநடுக்குப்பம், கரிக்காட்டுகுப்பம், செம்மஞ்சேரிகுப்பம் மற்றும் அங்காளம்மன்குப்பம் ஆகிய கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்பு தடுப்பு பணிகளுக்காக ரூ.57 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

**7.3.4 செங்கல்பட்டு மாவட்டம், புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைத்தல் மற்றும் கடலரிப்பு தடுப்புப்பணிகள் மேற்கொள்ளுதல்.**

செங்கல்பட்டு மாவட்டம், புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி கடலரிப்பு தடுப்புப்பணிகள் மேற்கொள்ள ரூ.9.70 கோடி

திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஆரம்பக்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

**7.3.5 விழுப்புரம் மாவட்டம், பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.**

விழுப்புரம் மாவட்டம், பிள்ளைச்சாவடி கிராமத்தில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.14.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 25% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.3.6 கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளம் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகள் அமைக்கும் பணிகள்.**

கடலூர் மாவட்டம், பெரியகுப்பம், விழுப்புரம் மாவட்டம், எக்கியார்குப்பம் மற்றும் அனுமந்தையில் மீன் இறங்குதளங்கள் மற்றும் கடலரிப்பு தடுப்புப் பணிகளுக்காக ரூ.22 கோடி மதிப்பீட்டில் நபார்டு

வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளது.

**7.3.7 கடலூர் மாவட்டம், வெள்ளாறு முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைபடுத்தும் பணிகள்.**

கடலூர் மாவட்டம், வெள்ளாறு முகத்துவாரம் மற்றும் கிள்ளை கிராமம் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகளுக்காக ரூ.70 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வெள்ளாறு முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்திட 512மீ நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களும் மற்றும் சின்னவாய்க்கால் முகத்துவாரத்தில் 305மீ நீளத்தில் இரண்டு நிலைப்படுத்தும் சுவர்களுடனும் வடிவமைக்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளது.

### 7.3.8 நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் பகுதியில் கடலரிப்பை தடுக்க கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணி.

நாகப்பட்டினம் மாவட்டம், நம்பியார் நகர் பகுதியில் கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைத்து கடலரிப்பை தடுக்கும் பணிக்காக ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் முடிவுறும் தருவாயில் உள்ளது.

### 7.3.9 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு பகுதியில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு பகுதியில் 843மீ நீளத்தில் அலைத்தடுப்பு (வடக்கு) சுவருடன் மீன் ஏலக்கூடம் அமைத்து கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட ரூ.30 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 15% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.3.10 இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தெற்கு பகுதியில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.**

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் தெற்கு பகுதியில் 1032மீ நீளத்தில் அலைத்தடுப்பு சுவர் (தெற்கு), 84மீ நீளத்தில் நேர்கல் சுவர் மற்றும் மீன் ஏலக்கூடம் அமைத்து கடலரிப்பிலிருந்து பாதுகாத்திட ரூ.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 10% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.3.11 தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்துதல் மற்றும் முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிகள்.**

தூத்துக்குடி மாவட்டம், மணப்பாடு கிராமத்தில் மீன் இறங்குதளத்தினை மேம்படுத்தி, முகத்துவாரத்தினை நிரந்தரமாக நிலைப்படுத்திட, தெற்கு அலைத்தடுப்பு சுவர் மற்றும் வடக்கு அலைத்தடுப்பு சுவர் முறையே 940 மீ மற்றும் 120மீ நீளத்தில் அமைத்து, முகத்துவாரத்தை ஆழப்படுத்திட ரூ.45 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு

நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 65% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

**7.3.12 கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பினை தடுப்பதற்காக கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமத்தில் மீன்இறங்குதளங்கள் அமைத்தல்.**

கன்னியாகுமரி மாவட்டம், கேசவன்புத்தன்துறை மற்றும் புத்தன்துறை கிராமத்தில் கடலரிப்பினை தடுப்பதற்காக கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், கீழமணக்குடி மற்றும் மேலமணக்குடி கிராமங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிகளுக்காக ரூ.101 கோடி திட்ட மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிராமப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தமிழ்நாடு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதில் கேசவன்புத்தன்துறையில் 14% பணிகளும், கீழமணக்குடி மீன் இறங்கு தளத்தில் 26% பணிகளும் மற்றும் மேலமணக்குடி மீன் இறங்கு தளத்தில் 92% பணிகளும் முடிக்கப்பட்டு, புத்தன்துறையில்

கடலரிப்பினை தடுப்பதற்கான கூடுதல் நேர்கல் சுவர்கள் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

## 7.4 உள்நாட்டு மீன்வள மற்றும் இதர உட்கட்டமைப்பு பணிகள்

### 7.4.1 கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் தென்காசி மாவட்டம் இராமநதியில் இந்திய பெருங் கெண்டைகளுக்கான சினை மீன் வங்கிகள் நிறுவுதல்

கடலூர் மாவட்டம், லால்பேட்டை மற்றும் தென்காசி மாவட்டம், இராமநதியில் இந்திய பெருங் கெண்டைகளுக்கான சினை மீன் வங்கிகள் நிறுவும் பணிக்காக ரூ.10 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் லால்பேட்டை சினை மீன் வங்கியில் 93% மற்றும் இராமநதி சினை மீன் வங்கியில் 88% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.4.2 கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி மையம் கட்டும் பணி

கடலூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒருங்கிணைந்த அலுவலகம் மற்றும் பயிற்சி

மையங்கள் அமைக்க மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.9 கோடிக்கு மாநில அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 85% பணிகள் முடிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.4.3 தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் அமைக்கும் பணிக்காக ரூ.2.50 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

### 7.4.4 தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் மிதவை கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பு அலகுகளை நிறுவுதல்

தமிழ்நாட்டில் ஐந்து நீர்த்தேக்கங்களில் மிதவை கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பு அலகுகளை நிறுவிடும் பணிக்காக ரூ.4.60 கோடி திட்ட மதிப்பீட்டில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

## 7.5 அரசு மீன்விதைப் பண்ணைகள் அமைத்தல்/ புனரமைத்தல், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பயிற்சி மையங்கள் அமைத்தல்

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் அரசு மீன் விதைப் பண்ணைகள் மற்றும் ஒருங்கிணைத்த அலுவலக கட்டடங்கள் அமைக்க மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் அரசால் ரூ.75.70 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளது. அவற்றின் விபரம் பின்வருமாறு:

**அட்டவணை.10**

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், சிற்றாறு II அணை அரசு மீன் குஞ்சு பண்ணைகளை புனரமைத்தல் | 4.00 |
| 2 | சேலம் மாவட்டம். மேட்டூர் அணை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் பயிற்சி மையத்துடன் ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் நிறுவுதல் | 8.00 |
| 3 | விருதுநகர் மாவட்டம், பிளவக்கல் மற்றும் வெம்பக்கோட்டை அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணைகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 7.00 |
| 4 | திருச்சி மாவட்டம், அசூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், வீடூரில் அரசு மீன் பண்ணையை நவீனப்படுத்துதல் | 6.20 |

| | | |
|---|---|---|
| 5 | கடலூர் மாவட்டம் அகரம், கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் திருமங்கலக்கோட்டை அரசு மீன் பண்ணைகளில் மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் | 10.80 |
| 6 | திருநெல்வேலி மாவட்டத்தில் வண்ணமீன் காட்சியகம் மற்றும் மீன் விற்பனையகம் நிறுவுதல் | 5.00 |
| 7 | நீலகிரி மாவட்டம், அவலாஞ்சி அரசு ட்ரவுட் மீன் பண்ணையை நவீனப்படுத்துதல் | 2.50 |
| 8 | கள்ளக்குறிச்சி மாவட்டம், கோமுகி அணை, வடக்கனேந்தல் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், கடம்பாவில் புதிய அரசு மீன் குஞ்சு வளர்ப்பு மையங்களை நிறுவுதல் | 10.00 |
| 9 | திருப்பத்தூர் மாவட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கத்தில் அரச மீன் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல் | 5.00 |
| 10 | திண்டுக்கல் மாவட்டம். பாலாறு–பொருந்தலாறு அணையில் தற்போதுள்ள மீன் பண்ணையை மேம்படுத்துதல் | 5.00 |
| 11 | கரூர் மாவட்டம், திருக்காம்புலியூர் மற்றும் திருவாரூர் மாவட்டம் நல்லிக்கோட்டை அரசு மீன் பண்ணைகளை நவீனப்படுத்துதல் | 7.20 |
| 12 | ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு பழைய மீன் பண்ணையில் சினைமீன் குளங்கள் நிறுவுதல் | 5.00 |
| | **மொத்தம்** | **75.70** |

## 7.6 மீனவர்களுக்கான வீட்டுவசதித் திட்டம்

தமிழ்நாடு அரசு கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு 5,000 வீடுகள் கட்டி வழங்கிட ரூ.85 கோடி செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. வீடு ஒன்றிற்கான அலகுத் தொகை ரு.1.70 இலட்சமாகும். அதனில் ரூ.61.97 கோடி பெறப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2,879 வீடுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு, 1,242 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

## 8. மீன் மற்றும் மீன் பொருட்களை சந்தைப்படுத்துதல்

2021–22 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 8.07 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். 2020–21 ஆம் ஆண்டில் மாநிலத்தின் தனி நபர் மீன் நுகர்வு 9.3 கிலோ கிராம் ஆகும். நவீன மற்றும் சுகாதாரமான மீன் சந்தைகள் அமைத்தல், மீன் அங்காடிகள், நடமாடும் மீன் விற்பனை வாகனங்கள் மற்றும் இணையதள மீன் விற்பனை வாயிலாக மாநிலத்தில் மீன் நுகர்வு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. தேசிய தனி நபர் மீன் நுகர்வான ஆண்டொன்றிற்க்கு 6 கிலோ கிராம் அளவினை ஒப்பிட்டுப் பார்க்கையில்,

மாநிலத்தின் தனி நபர் மீன் நுகர்வு 10.66 கிலோ கிராமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8.1 மீன்விற்பனை சந்தைகள் அமைத்தல்

பொதுமக்களுக்கு தரமான மீன்களை சுகாதாரமான முறையில் வழங்கிடும் வகையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய மீன் சந்தைகள் அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டமானது மாநில அரசு, தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நிதியுதவிடன் ரூ.17.54 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது,

இத்திட்டத்தின் கீழ், 21 மீன் சந்தைகள் அமைத்திட மாநில அரசின் நிதியுதவியாக ரூ.6.69 கோடி மற்றும் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியாக ரூ.7.19 கோடி, சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள்/ மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் பின்வருமாறு :

**அட்டவணை: 11**

| வ. எண் | மாவட்டம் | புதிதாக அமைக்கப்பட்ட / புனரமைக்கப்பட்ட மீன் விற்பனை சந்தைகளின் எண்ணிக்கை | மொத்த திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கடலூர் | 1 | 22.50 |
| 2 | இராணிபேட்டை | 1 | 61.29 |
| 3 | புதுக்கோட்டை | 1 | 53.70 |
| 4 | திருச்சி | 1 | 250.00 |
| 5 | சேலம் | 2 | 139.30 |
| 6 | திருப்பூர் | 1 | 93.00 |
| 7 | ஈரோடு | 1 | 100.00 |
| 8 | சிவகங்கை | 1 | 100.00 |
| 9 | நாகப்பட்டினம் | 4 | 158.57 |
| 10 | தென்காசி | 1 | 38.76 |
| 11 | தூத்துக்குடி | 1 | 13.60 |
| 12 | இராமநாதபுரம் | 3 | 293.39 |
| 13 | கன்னியாகுமரி | 2 | 179.47 |
| 14 | விழுப்புரம் | 1 | 250.00 |
| **மொத்தம்** | | 21 | 1,753.58 |

மேற்கூறிய அனைத்து 21 மீன் சந்தைகளின் கட்டுமானப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## 8.2 மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி

இந்தியாவில் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள்

ரூ.57,586.48 கோடி மதிப்பிலான 13.69 இலட்சம் மெட்ரிக் டன் ஏற்றுமதியுடன் பெரும்பங்கு வகிக்கிறது.

தமிழகத்திலிருந்து 2021–22 ஆம் ஆண்டில் 1.14 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு கடல் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நியச் செலாவணியாக ரூ.6,559.64 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவற்றில் கடல் உணவு பொருட்களான உறைந்த இறால், மீன்கள், கணவாய் மீன், உலர்மீன், குளிரூட்டப்பட்ட மீன் பொருட்கள் மற்றும் உயிர் மீன்களும் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென்கிழக்கு ஆசிய நாடுகள், ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை இந்திய மீன் பொருட்களுக்கான பெரும் மீன் சந்தைகளாகும்.

தமிழ்நாட்டில் அரசால் கட்டப்பட்டுள்ள 9 பெரிய மீன்பிடித் துறைமுகங்கள், 4 நடுத்தர மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் 52 மீன் இறங்குதளங்களின் வாயிலாக மீன் மற்றும் மீன் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்கள் மீன்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதில் மாநிலத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## 9. பயிற்சி மற்றும் நிதியுதவி சேவைகள்

### 9.1 மீனவ இளைஞர்கள் கடற்சார் கல்வி பயில ஊக்குவித்தல்

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட 6 கடற்சார் பாடப்பிரிவுகளை பயின்றிட, மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2022-23ஆம் ஆண்டில் 37 மீனவ இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.12 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2023-24ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 9.2 அகில இந்திய குடிமைப்பணியில் சேர்வதற்கு மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் வாயிலாக, 2017 ஆம் ஆண்டு முதல், இந்திய குடிமைப்பணி போட்டித் தேர்வுகளை திறனுடன் எதிர்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு அரசு செலவில் ஆறு மாத கால பிரத்யேக பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரி (அகில இந்திய

குடிமைப் பணிகளுக்கான பயிற்சி நிலையம், சென்னை) மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை ஐந்து அணிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.12.50 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு, 102 மீனவ இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 18 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

## 9.3 மீனவர் மற்றும் மீன்வளர்ப்போருக்கு விவசாய கடன் அட்டை (Kisan Credit Card) வழங்குதல்

மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கு தேவைப்படும் நடைமுறை மூலதன செலவினங்களுக்கு வங்கிகளிடமிருந்து கடன் பெற்றிட, விவசாய கடன் அட்டை வழங்கும் திட்டமானது ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக மீன்பிடிப்பு, மீன்/ இறால் வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு, சிப்பி வளர்ப்பு மற்றும் மீன் விற்பனைக்கு தேவைப்படும் நடைமுறை மூலதன செலவினங்களை வங்கிகளிடமிருந்து குறுகிய கால

கடனாக பெற்றிட இயலும். இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய மீனவர்/ மீன்வளர்ப்போர்க்கு நடைமுறை மூலதன செலவிற்கு கடன் உச்ச வரம்பாக ரூ.2 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன் தொகைக்கு, ஆண்டொன்றிற்கு செலுத்த வேண்டிய வட்டித்தொகையில் 2 விழுக்காடு குறைக்கப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாக கடனை திரும்ப செலுத்தும் நபருக்கு வட்டித்தொகையில் ஆண்டுக்கு 3 விழுக்காடு குறைக்கப்பட்ட வட்டிச்சலுகையும் அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டிலுள்ள மீனவர் / மீன்வளர்ப்போருக்கு 4712 விவசாய கடன் அட்டைகள் மூலம் ரூ.35.88 கோடி மதிப்பிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 10. விரிவாக்கம் மற்றும் இதர நடவடிக்கைகள்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் செயல்பட்டு வரும் விரிவாக்கப்பிரிவு, அரசின் நலத்திட்டங்களை மீனவர்கள், மீன்வளர்ப்போர் மற்றும் பிற பங்குதாரர்களைச் சென்றடையும் வகையில் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு பொருட்காட்சிகள் மற்றும் வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்று, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மீன்வள மேலாண்மை, கடலில் பாதுகாப்பான மீன்பிடிப்பு முறைகள், மீன்களை சுகாதாரமாக கையாளுதல், மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களின் தூய்மை குறித்த விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரின் குறைகளை தீர்க்க, மீனவர் குறைதீர்க்கும் நாள் மற்றும் மீன் வளர்ப்போர்க்கான கூட்டங்கள் இத்துறையால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகிறது. மீன்வளம் தொடர்பான முக்கிய தினங்களான உலக பெருங்கடல் தினம் (ஜீன்–8), தேசிய மீன் வளர்ப்போர் தினம் (ஜீலை–10) மற்றும் உலக மீன்வள தினம் (நவம்பர்–21) ஆகியவை மாநிலம் மூழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வில் மாநிலத்தில் சிறந்து விளங்கும் மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரை ஊக்குவித்திட விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள், விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

'உலக மீன்வள தினம் 2022' கொண்டாட்ட நிகழ்வில் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர்க்கு பலவேறு பிரிவுகளின் கீழ் 9 விருதுகள் வழங்கப்பட்டன.

## 10.1 தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொண்டு வருகிறது. இதற்கு முன்பு 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசு தற்பொழுது மாநிலத்தில் உள்ள அனைத்து மீனவர் குடும்பங்களில் உள்ள உறுப்பினர்களின் விவரங்களை சேகரித்து வருகிறது. இதன் அடிப்படையில் மீனவ மக்களின் தற்போதைய நிலை அறியப்பட்டு, மீனவர்களின் நலனுக்காக, மீன்வளக் கொள்கைகள் மற்றும் நலத்திட்டங்கள் உருவாக்கப்படும்.

## 10.2 தமிழ்நாடு மீனவ சமூதாயத்தின் சமூக பொருளாதார நிலை குறித்து ஆய்வு

தமிழ்நாடு அரசு மீனவ மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும்

உட்கட்டமைப்பு வசதிகளை மாநிலம் முழுவதும் உருவாக்குவதன் வாயிலாக அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு நலத்திட்டங்களினால் மீனவ மக்களின் சமூக பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ளும் பொருட்டும், கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வுகள் நடத்திட அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. திட்டமிடுதல், கொள்கை முடிவு உருவாக்கம், திட்டச்செயல்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை மாநிலத்தில் கட்டமைப்பதற்கு இவ்வாய்வு பேருதவியாக அமையும்.

## 11. மீனவ கூட்டுறவு சங்கங்கள்

தமிழ்நாடு மீனவர் மற்றும் மீனவ மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவக் கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையானது மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள மொத்தமுள்ள 1,457 தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்/ 12

மாவட்ட கூட்டுறவு இணையங்கள்/ 1 மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.52 இலட்சம் மீனவர்/ மீனவ மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 62 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 12 பகுதி நேர நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம், அட்டவணை 12ல் கொடுக்கப்பட்டுள்ளது:

**அட்டவணை: 12**

**மீனவ கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்**

| கூட்டுறவு சங்கம் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **தொடக்க கூட்டுறவு சங்கங்கள்** | | |
| கடல்மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 576 | 3,66,846 |
| கடல்மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 476 | 2,94,116 |
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் | 330 | 82,677 |
| உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் | 75 | 7,990 |
| **மொத்தம்** | **1,457** | **7,51,629** |
| மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் | 12 | 998 |
| தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் | 1 | 834 |
| **ஆக மொத்தம்** | **1,470** | **7,53,461** |

## 12. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDG)

2030ஆம் ஆண்டுக்குள் நிலையான எதிர்காலத்தை உருவாக்கிட, ஐக்கிய நாடுகள் அமைப்பு வறுமையை ஒழிக்கவும், சமத்துவமின்மையினை போக்கவும் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவை சீரமைப்பதற்காகவும் 17 நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை (**SDG**) உருவாக்கியுள்ளது. வறுமையை போக்கவும், பசி மற்றும் 'ஊட்டச்சத்து குறைபாடு உணவு, பொருளாதார வளர்ச்சி மற்றும் இயற்கை வளங்களை அதிகமாக பயன்படுத்துவதற்கு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஒரு பெரும் வாய்ப்பாக உள்ளது.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் உற்பத்தியும், உற்பத்திக்கு ஏற்ற நுகர்வு ஒரு அலகாகவும் (இலக்கு 12) 'கடல்வளம்' (இலக்கு 14) மூன்று குறிக்கோள்களுடன் செயல்பட்டு வருகிறது. இலக்கு–12ஐ அடைவதற்கு பல்வேறு திட்டங்களின் மூலம் மாநிலத்தின் மீன் உற்பத்தியை அதிகரிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது. மாநிலத்தின் மீன் உற்பத்தி 2020–21ல் 7.23 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 2021–22ல் 8.06 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. 2020–21ல் மாநிலத்தின் தனி நபர் மீன் நுகர்வு 9.3 கிலோவிலிருந்து 2021–22ல்,

10.66 கிலோவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'இலக்கு–14'ல் கடல்மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல், மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல், கடல்வாழ் உயிரின வளர்ப்பு, திறன்மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்தினை அமல்படுத்துவதன் வாயிலாக நீடித்த நிலையான மீன்பிடிப்பை அடைவதற்கு இத்துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இலக்கு–14ஐ அடைய, அரசு 90 இடங்களில் பல்வேறு திட்டங்களின் கீழ் 28.50 கோடி ரூபாய் செலவில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவப்பட்டதினைத் தொடர்ந்து மாநிலத்தின் கடல் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. மேலும் 3 பாக்–வளைகுடா மாவட்டங்களில் ரூ.79 கோடி செலவில் 217 அலகுகள் கொண்ட செயற்கை மீன் உறைவிடங்கள் நிறுவிடவும் மற்ற மாவட்டங்களில் ரூ.64 கோடி செலவில் 200 அலகுகள் நிறுவிடவும் துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவர்களுக்கு செயற்கை மீன் உறைவிடங்கள் அமைப்பது சாதகமாக இருப்பதால்,

தமிழக கடலோரப் பகுதிகளில் அதிக அளவில் செயற்கைமீன் உறைவிடங்கள் அமைக்க மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய களப்பணி அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து தனிப்பிரிவு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தரவுகள் அவ்வப்போது தகவல் இணையத்தில் ஏற்றப்பட்டு வருகின்றன. மாவட்ட நல்லாட்சி குறியீட்டில் (DGGI) தரவரிசைப்படுத்துவதற்கான குறிக்காட்டியாக மீன்களின் வளர்ச்சி விகிதம் சேர்க்கப்பட்டுள்ளது.

## 13. தமிழ்நாடு மீனவர் நலவாரியம்

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலனை உறுதி செய்திட, தமிழ்நாடு அரசால் 2007ம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நலவாரியம் நிறுவப்பட்டது.

இவ்வாரியமானது மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரை உறுப்பினர் செயலராகவும், அலுவல் மற்றும் அலுவல்–சாரா உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இம்மீனவர் நலவாரியத்தில் மொத்தம் 4.99 இலட்சம் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மீனவர் நலவாரிய விதிகளின்படி, நிதியத்திற்கான ஆண்டு பங்களிப்புத் தொகையாக உறுப்பினர்களிடம் இருந்து வருடத்திற்கு ரூ.20/– உறுப்பினர் சந்தாத் தொகை, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு சொந்தமான டீசல் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் டீசலில் லிட்டருக்கு 10 பைசா வீதம் மற்றும் விசைப்படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் வரியில்லா டீசலில் லிட்டருக்கு 20 பைசா வீதமும், நீர்நிலைகளின் மீன்பாசி குத்தகைத் தொகையில் 7 விழுக்காடு வீதமும் மற்றும் மேட்டூர் அணை மீனவர் கூட்டுறவு மற்றும் விற்பனை சங்கத்தால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனையில் கிலோ ஒன்றிற்கு ரூ.2/– என்ற வீதத்தில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. 2022–23ம் ஆண்டில் தமிழ்நாடு மீனவர் நலவாரிய பங்களிப்புத் தொகையாக ரூ.5.34 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணை 13ல் கொடுக்கப்பட்டுள்ளது:

# அட்டவணை: 13

## தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

| வ. எண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| | | விடுதியில் தங்காதோர் | | விடுதியில் தங்கிப் படிப்பவர் | |
| 1. | உறுப்பினரின் மகன்கள் மற்றும் மகள்கள் கல்வி உதவித் தொகை | மாணவர் | மாணவியர் | மாணவர் | மாணவியர் |
| | அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,250 | 1,500 | -- | -- |
| | ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,750 | 2,000 | -- | -- |
| | இ) தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற்நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டு ஒன்றிற்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| | ஈ) இளங்கலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 1,750 | 2,250 | 2,000 | 2,500 |
| | உ) முதுகலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |

| வ. எண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) | | | |
|---|---|---|---|---|---|
| | ஊ) இளங்கலை தொழில் கல்விகள் (மீன்வள அறிவியல், வேளாண்மை, கால்நடை அறிவியல், சட்டம், பொறியியல், மருத்துவம்) (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | எ) முதுகலை தொழிற்கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 2. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி | | | 3,000 | 5,000 |
| | ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம். | | | 3,000 | 5,000 |
| 3. | மகப்பேறு / கருச்சிதைவு /கருக்கலைப்பு உதவித் தொகை | | | | |
| | அ) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் ஆறு மாதங்கள்) | | | | 6,000 |
| | ஆ) கருச்சிதைவு | | | | 3,000 |
| | இ) கருக்கலைப்பு | | | | 3,000 |
| 4. | விபத்து நிவாரணம் | | | | |
| | அ) விபத்தினால் மரணம் | | | | 2,00,000 |
| | ஆ) இரண்டு கைகள் இழப்பு | | | | 1,00,000 |

| வ. எண் | நிவாரணம் / உதவி திட்டங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| | இ) இரண்டு கால்கள் இழப்பு | 1,00,000 |
| | ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு | 1,00,000 |
| | ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு | 1,00,000 |
| | எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு | 50,000 |
| 5. | மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின் உடனடியாக விபத்தின் காரணமாக அல்லாமல் | 2,00,000 |
| 6. | மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர் | 2,00,000 |
| 7. | இயற்கை மரணம் | 15,000 |
| 8. | ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை | 2,500 |

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் கீழ் விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு நிவாரணம் / உதவி தொகையினை துரிதமாக வழங்கிடவும், புதிய உறுப்பினர் சேர்க்கைக்காகவும் பிரத்யேக வலைதளம் www.tnfwb.tn.gov.in சென்னை, தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் உருவாக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

இவ்வலைதளத்தை பயன்படுத்த அனைத்து மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்களுக்கும் பயனாளர் குறியீடு (User ID) வழங்கப்பட்டுள்ளன. நலவாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் நிவாரணம் / உதவி கோரும் விண்ணப்பங்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் பரிசீலிக்கப்பட்டு, உரிய ஆவணங்களுடன் தமிழ்நாடு மீனவர் நலவாரிய தலைமை அலுவலகத்திற்கு வலைதளம் வாயிலாக பரிந்துரை செய்யப்பட்டு, மின்னணு பணப்பரிமாற்றம் வாயிலாக பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக நிவாரணம் / உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர்.ஜெ ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்தில் மீனவ மாணவர்கள் பி.எப்.எஸ்.ஸி., (மீன்வள அறிவியல்) மற்றும் பி.டெக் (மீன்வள பொறியியல்) பாடப்பிரிவுகளில் பயில்வதற்கு ஏதுவாக 5 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தினால் அம்மாணவர்களுக்கு முழு கல்விக்கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2022–23ஆம் ஆண்டில்

ரூ.14.02 இலட்சம் கல்விக் கட்டணமாக தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் ஏற்கப்பட்டுள்ளது.

2022−23 ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட திட்ட விபரங்கள் அட்டவணை 14−ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை.14**

| வ. எண். | நிவாரணம் / உதவித்திட்டங்கள் | எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை | 1,860 | 35.19 |
| 2 | திருமண உதவி | 94 | 3.46 |
| 3. | விபத்து மரணம் | 147 | 292.00 |
| 4. | உடல் உறுப்பு இழப்பு | 4 | 3.50 |
| 5. | மீன்பிடிக்கையில் இறத்தல் | 20 | 40.00 |
| 6. | மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவர்கள் | 2 | 3.00 |
| 7. | இயற்கை மரணம் | 1,104 | 165.60 |
| 8. | ஈமச்சடங்கிற்கான உதவித்தொகை | 1,223 | 30.57 |
| | **மொத்தம்** | **4,454** | **573.32** |

## 14. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையமானது தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983ன்படி 06.11.1991 அன்று பதிவு செய்யப்பட்டு, கடந்த 19.10.1992 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இவ்விணையத்தில் 474 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 198 கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள், 153 உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91.29 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

இவ்விணையத்தின் செயற்பதிவாளராக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அவர்களும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல்/ இணை இயக்குநர் பதவித்தரத்தில் மேலாண்மை இயக்குநரும் இணையத்தை நிர்வகித்து வருகின்றனர். இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி

மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :**

### 14.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப்படகுகளுக்கு, 2022-23ஆம் நிதியாண்டில், 14 விற்பனை மையங்கள் மூலம் 6,602 கிலோ லிட்டர் தொழிலக மண்ணெண்ணெய் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.1.32 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 14.2 மீன்பிடி கலன்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 17 டீசல் விற்பனை நிலையங்கள் வாயிலாக 2022-23ஆம் ஆண்டில், 22,088 கிலோ லிட்டர் வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட

நாட்டுப்படகு மற்றும் விசைப் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.4.62 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.3 மீன் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் பொதுமக்களுக்கு தரமான மீன்களை, நியாயமான விலையில் வழங்கிடும் பொருட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வையாவூர், செங்கல்பட்டு மாவட்டத்தில் வாணியஞ்சாவடி, கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி நகரம், அரியலூர், மதுரை மாவட்டத்தில் பழங்காநத்தம், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம், பரமக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில் வண்ணாரப்பேட்டை, பேட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள்அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 2022 –23 ஆம் ஆண்டில் இதன் மூலம் மொத்த வாடகை வருவாய் ரூ.7.44 இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

## 14.4 மீனவ மகளிருக்கு சிறுகடன் வழங்குதல்

தற்போது மீனவர்கள், குறிப்பாக மீனவ மகளிருக்கு கடன் அளிப்பவர் மற்றும் மீன் கொள்முதல் செய்பவர் மூலம் அன்றாட வியாபாரத்திற்கு அதிக வட்டிக்கு கடன் பெற்று மீன் விற்பனை சார்ந்த

தொழிலில் ஈடுபட்டுவரும் நிலையில், குறைவான வருவாயையே பெறுகின்றனர். மீனவ மகளிருக்கு உதவிடும் வகையிலும், கடன் கொடுப்பவரின் பிடியிலிருந்து விடுபடும் வகையிலும் இணையம் குறைந்தபட்ச வட்டிவிகிதத்தில் சிறுகடன் வழங்கி, அதன் வாயிலாக மீனவ மகளிர் விற்பனை செய்யும் மீன்களுக்கு கூடுதல் விலை கிடைக்க வழிவகை செய்துள்ளது. 2022 – 23 ஆம் ஆண்டில் கடலூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 205 மீனவ மகளிர் அடங்கிய 41 கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு மீனவ மகளிர் பயனாளி ஒருவருக்கு ரூ.15,000/– வீதம், தொகை ரூ.30.75 இலட்சம் சிறுகடன் வழங்கப்பட்டுள்ளது.

**14.5 மீன்பிடித் துறைமுகம் / மீன் இறங்குதளம் ஆகியவற்றில் கூட்டுறவு விற்பனை மையங்கள் அமைத்தல்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையமானது, தேங்காப்பட்டணம், குளச்சல், சின்னமுட்டம், தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மீன்பிடித் துறைமுகங்களிலும், தருவைக்குளம் மீன்பிடி இறங்குதளத்திலும் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு விற்பனை மையத்தின் மூலம் மீன்பிடிக்கத் தேவையான பொருட்கள் மற்றும் மீனவர்களுக்கு

தேவையான இதர அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இதன் மூலம் ரூ.3.34 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 14.6 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்குதல்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் 2022–2023ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வெளிப் பொருத்தும் இயந்திரங்கள் மாநில அரசு நிதியுதவி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. இயந்திரத்தின் விலையில் 40 விழுக்காடு அல்லது ரூ.48,000/– இதில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 2022–23ம் ஆண்டில் ரூ.1.44 கோடி மானியத்தில் 333 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 14.7 திட்ட அலுவலக கட்டுமானப் பணி

சென்னை ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித்திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பில் இவ்விணையத்தின் தூத்துக்குடி திட்ட அலகிற்கான அலுவலகம் கட்டப்பட்டு, 27.01.2023 அன்று திறக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

## 14.8 டீசல் விற்பனை நிலையம் நிறுவுதல்

மயிலாடுதுறை மாவட்டம் வானகிரியில் டீசல் விற்பனை நிலையம் 23.09.2022 அன்று துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த டீசல் விற்பனை நிலையத்தின் மூலம் மீனவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## 14.9 பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் வாயிலாக 2020-21 ஆம் ஆண்டில் மத்திய, மாநில அரசு மற்றும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மீன் வியாபாரம் மேற்கொள்ள குளிர்காப்புப் பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம், குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய மூன்று சக்கர வாகனம், குளிரூட்டும் வசதியுடன் கூடிய நான்கு சக்கர வாகனம் மற்றும் மீன் விற்பனை நிலையம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் / மீனவ மகளிர் பயனாளிகளுக்கு 60% மற்றும் பொது பிரிவினருக்கு 40% மானியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மானிய விபரங்கள் அட்டவணை 15 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை. 15

| வ. எண் | திட்டம் | 2021–2022 | | 2022–2023 | |
|---|---|---|---|---|---|
| | | அலகு | மானியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | அலகு | மானியத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | மீன்விற்பனை நிலையம் | 10 | 40.00 | 6 | 24.00 |
| 2 | குளிரூட்டும் வசதியுடன் கூடிய நான்கு சக்கர வாகனம் | 2 | 16.00 | – | – |
| 3 | குளிர்காப்பு பெட்டியுடன் கூடிய மூன்று சக்கர வாகனம் | 15 | 21.00 | 40 | 52.20 |
| 4 | குளிர்காப்பு பெட்டி பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் | 500 | 157.50 | 225 | 77.70 |
| | **கூடுதல்** | **527** | **234.50** | **271** | **153.90** |

### 14.10. நிதிநிலை

2022–23 ஆம் ஆண்டில் இணையத்தால் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் வாயிலாக ரூ.228.86 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, மொத்த இலாபமாக ரூ.5.93 கோடி (தணிக்கை செய்யப்படாதது – பிப்ரவரி 2023 வரை) வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மேலும், இவ்விணையம், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு தனது பங்களிப்புத் தொகையாக ரூ.38.33 இலட்சம் வழங்கியுள்ளது.

## 15. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் நிறுவனங்களின் சட்டத்தின் கீழ், 1974 ஆம் ஆண்டு பொதுத்துறை நிறுவனமாக ரூ.5 கோடி பங்கு முதலீட்டுடன் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் மாநில மீன்வளம் தொடர்பான வியாபார ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டது. அரசால் நியமிக்கப்படும் தலைவரை முதன்மையாகக் கொண்ட இயக்குநர் குழுமத்தினால் இக்கழகம் நிர்வகிக்கப்படுகிறது.

ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஆவார்.

இக்கழகத்தின் நிருவாகப் பணிகள் பதிவலுவலக அளவில் பொது மேலாளர், முதுநிலை மேலாளர்கள் (கடல்வளம் மற்றும் உள்நாட்டு மீன்வளம்), மேலாளர் (தணிக்கை மற்றும் கணக்கு) ஆகியோராலும், கள அளவில் மேலாளர்கள், துணை மேலாளர்கள் மற்றும் உதவி மேலாளர்கள் ஆகியோரால் அமைச்சுப் பணியாளர்களின் உதவியோடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 15.1 உள்நாட்டு மீன்வளம்

### 15.1.1 நீர்த்தேக்க மீன்வளம்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையிலிருந்து நீண்டகால குத்தகைக்கு பெறப்பட்ட பின்வரும் 8 நீர்த்தேக்கங்களான, ஈரோடு மாவட்டம் பவானிசாகர், பெரும்பள்ளம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியாறு, திருப்பூர் மாவட்டம் அமராவதி, திருமூர்த்தி, உப்பாறு, திண்டுக்கல் மாவட்டம் பாலாறு–பொறந்தலாறு மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் ஆகியவற்றின் மீன்வள மேலாண்மையினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. நடப்பாண்டு பிப்ரவரி 2023 வரை 791.15 டன் மீன்கள் இந்நீர்தேக்கங்களில் பிடிக்கப்பட்டதுடன், வருமானமாக ரூ.7.08 கோடி ஈட்டப்பட்டுள்ளது. கூடுதல் வருவாயினை பெற்றிடும் வகையில்,

இந்நீர்த்தேக்கங்களின் மீன்பிடி குத்தகை உரிமம் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 15.1.2 மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்த சாத்தனூர், ஆழியாறு, அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு–பொறந்தலாறு ஆகிய இடங்களில் 3.83 ஹெக்டேர் பரப்பளவுள்ள மீன் பண்ணைகளை கழகம் குத்தகைக்கு பெற்றுள்ளது. சாத்தனூர் மீன் பண்ணையில் பிப்ரவரி 2023 வரை 1.22 கோடி இந்திய பெருரக கெண்டை மற்றும் சாதா கெண்டை நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. சாத்தனூர், ஆழியாறு, அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு–பொறந்தலாறு பண்ணைகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு, பிப்ரவரி 2023 வரை 24.13 இலட்சம் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தரமானதாக உற்பத்தி செய்யப்படும் இம்மீன்குஞ்சுகள், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக நீர்த்தேக்கங்களில் இருப்புச் செய்யப்படுவதுடன், மீன்வளர்ப்போருக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

### 15.1.3 வண்ண மீன் உற்பத்தி மற்றும் மீன்காட்சியகங்கள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் வண்ணமீன்களின் உற்பத்திக்கென தனியே ஆழியாறு மீன் பண்ணையில் செயல்பட்டுவரும் உற்பத்தி அலகில், கோய் கெண்டை, பொன்மீன், பூகொண்டை மற்றும் சிச்லிட் இன மீன்கள் இனப்பெருக்கம் செய்து, வளர்க்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. இக்கழகம் மூலம் ஆழியாறு, திருமூர்த்தி மற்றும் சாத்தனூர் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் வண்ண மீன் காட்சியகங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாநகராட்சிகளின் மூலம் அமைக்கப்பட்டுள்ள பொது வண்ண மீன் காட்சியகங்களின் பராமரிப்பினையும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு வருகிறது. வண்ண மீன் காட்சியகத்திற்குத் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் வண்ண மீன்களை விற்பனை செய்வதற்கான ஒரு பிரத்யேக விற்பனை அங்காடியினை இக்கழகம் சேத்துப்பட்டு பசுமைப்பூங்காவில் அமைத்து வருகிறது. மேற்கூறிய செயல்களின் வாயிலாக இவ்வருடத்தின் பிப்ரவரி 2023 வரை ரூ.17.21 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

## 15.2 கடல் மீன்வளம்

### 15.2.1 வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் வழங்குதல்

தமிழ்நாடு அரசால் கடல் மீனவர்களின் நலனுக்காக வழங்கப்படும் வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் தமிழ்நாடு கடலோரத்தில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் அமைக்கப்பட்டுள்ள 32 டீசல் எரிபொருள் நிலையங்கள் மூலம் வழங்கப்படுகிறது. பிப்ரவரி 2023 வரை 75,008.41 கிலோலிட்டர் வரிவிலக்களிக்கப்பட்ட டீசல் விற்பனை செய்யப்பட்டு, ரூபாய் 591.49 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் மீன்பிடி துறைமுகத்தில் ஒரு புதிய டீசல் விற்பனை நிலையம் துவக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மூலம் எரியெண்ணெய் விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 15.2.2 மானிய விலை தொழிலக மண்ணெண்ணெய் மீன்பிடி கலன்களுக்கு விற்பனை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாரம்பரிய நாட்டுபடகு மீனவர்கள் பயன்பெறும் வகையில் மண்ணெண்ணெயினால் இயக்கப்படும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் மானிய விலை மண்ணெண்ணெய், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் 11 விற்பனை நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு வருடத்தில் பிப்ரவரி 2023 வரை 10504 கிலோலிட்டர் மானிய விலை மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு, ரூபாய் 94.05 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 15.2.3 பெட்ரோல் விற்பனை

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரத்தில் உள்ள எரிபொருள் நிலையத்தில் கூடுதல் வருவாய் ஈட்டிடும் பொருட்டு, ஒரு பெட்ரோல் விற்பனை நிலையத்தினை நிறுவியுள்ளது. நடப்பாண்டில் 175.56 கிலோலிட்டர் பெட்ரோல் அப்பகுதி பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு, ரூ.1.82 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் இதர எரிபொருள் நிலையங்களிலும் கூடுதலாக பெட்ரோல் விற்பனை நிலையங்கள் எதிர்வரும் காலங்களில் அமைக்கப்படவுள்ளது.

### 15.2.4 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் விற்பனை

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 544 வெளிப்பொருத்தும் இயந்திரங்களை கொள்முதல் செய்து, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கியதன் மூலம் ரூ.1.77 கோடி அரசு மானியமாக மீனவர்களுக்கு வழங்கியுள்ளது.

### 15.3 மீன் விற்பனை

### 15.3.1 மீன் விற்பனை அங்காடிகள் மற்றும் ஊர்திகள்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் ஆரம்ப காலத்திலிருந்தே மீன் விற்பனைப் பணியினை முக்கிய வியாபார செயல்பாடாக மேற்கொண்டு வருவதன் மூலம் தரமான மீன்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட மீன் உணவு வகைகளை நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தற்பொழுது 43 சங்கிலித் தொடர் மீன் அங்காடிகளை சென்னை, மதுரை, திண்டுக்கல், கோயம்புத்தூர்,

பொள்ளாச்சி, திருப்பூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலும், 12 நடமாடும் மீன் விற்பனை ஊர்திகளை சென்னை, திருவண்ணாமலை, நெய்வேலி, மதுரை, பொள்ளாச்சி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இயக்கி வருகிறது.

நடப்பாண்டில் 472.86 டன் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு, பிப்ரவரி 2023 வரை ரூ.14.51 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில்லரை மீன் விற்பனை பணிகளை விரிவாக்கம் செய்திடும் வகையில் கூடுதலாக நவீன மீன் விற்பனை அங்காடிகள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை ஊர்திகளை செயல் படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**15.3.2 மதிப்புக்கூட்டப்பட்ட மீன் விற்பனை**

மீன் விற்பனையில் கூடுதல் வருவாயினை ஈட்டுவதற்கு மதிப்புக் கூட்டுதல் அவசியம். ஆதலால், அதனை செயல்படுத்தும் விதமாக சென்னை மெரினா கடற்கரை (2), சைதாப்பேட்டை (1) ஆகிய 3 இடங்களில் நடமாடும் கடலுணவு ஊர்திகள் மற்றும் சாந்தோம் CIBA வளாகத்தில் அமர்ந்து உணவருந்தும் வசதியுடன் கூடிய ஒரு மீன் உணவகமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீன் மற்றும் இறால் ஊறுகாய் வகைகள் தயார் செய்யப்பட்டு கழகத்தின் மீன்

விற்பனை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பொதுமக்களிடையே மீன் உணவு நுகர்வு மற்றும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒரு மீன் உணவு விற்பனை நிலையத்தினை சென்னை தீவுத்திடல் சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைத்திருந்தது. மதிப்புக் கூட்டிய மீன் உணவு விற்பனை மூலம் நடப்பாண்டில் பிப்ரவரி 2023 வரை ரூ.1.65 கோடி விற்றுமுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 15.3.3 இணைய வழி மீன் விற்பனை

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் www.meengal.com என்ற இணைய முகவரி மற்றும் 'meengal' எனும் கைபேசி செயலி வாயிலாக இணையவழி மீன் விற்பனையினை மேற்கொண்டு வருகிறது. இவ்விணைய வழி மீன் விற்பனையின் வாயிலாக நுகர்வோரின் இல்லங்களுக்கே மீன்களை கொண்டு போய் சேர்ப்பதற்கு உரிய மின் வணிகத்தரவுகள் (e–commerce) பயன்படுத்தப்பட்டன. இவ்விற்பனையின் துவக்க காலமான ஏப்ரல் 2020 லிருந்து இது வரை 38,324 நபர்களுக்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டு, பிப்ரவரி 2023 வரை 57.73 மெட்ரிக் டன் மீன்கள்

ரூ.3.16 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் "இது நம்ம ஊரு மீன்கள்" (Idhu Namma Ooru Meengal) என்ற வணிகச் சின்னத்தை அறிமுகப்படுத்தி, அதனை சமூக ஊடகங்கள் வழியாக மீன்விற்பனையை பிரபலப்படுத்தும் பணிகளையும் செய்து வருகிறது.

### 15.3.4 மொத்த மீன் விற்பனை சந்தை, உக்கடம், கோயம்புத்தூர் மாவட்டம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் கோயம்புத்தூர் உக்கடம் பகுதியில் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைந்து ஒரு மொத்த மீன் விற்பனை சந்தையினை நிறுவியுள்ளது. தற்பொழுது சந்தையிலுள்ள கடைகள் மற்றும் வடிகால் வசதிகள் புனரமைத்து மேம்படுத்தப்பட்டுள்ளன. மீன்களை நல்ல நிலையில் இருப்பு வைக்கவும் தரத்தினை மேம்படுத்தும் விதமாகவும், 10 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பனிக்கட்டி நிலையம் மற்றும் குளிர்பதன அறை ரூ.1.10 கோடி செலவில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வருகிறது.

## 15.4 சேத்துப்பட்டு, பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்கா மேலாண்மை

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் அமைக்கப்பட்ட சேத்துப்பட்டு பொழுது போக்கு மீன் பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்காவினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் பராமரித்து வருகிறது. சேத்துப்பட்டு பொழுதுபோக்கு மீன்பிடிப்புடன் கூடிய பசுமைப் பூங்காவிலுள்ள பின்வரும் வசதிகளான, வண்ண மீன் காட்சியகத்துடன் கூடிய நீர்வாழ் மெய்நிகர் காட்சியகம், படகுக்குழாம், தூண்டில் மீன்பிடிப்பு, உணவகம், நடையிற்சி பாதை, சிறுவர் விளையாட்டுப் பகுதி, முப்பரிமாணத் திரையரங்கு மற்றும் பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகிய வசதிகள் மூலம் இப்பூங்கா ஏராளமான பொதுமக்களை கவர்வதுடன், குறிப்பாக குழந்தைகளையும் வெகுவாக ஈர்க்கின்றது. நடப்பாண்டின் பிப்ரவரி 2023 மாதம் வரை 1,78,539 மக்கள் வருகை புரிந்ததுடன், நுழைவுக் கட்டணமாக ரூ.39.69 இலட்சம் வசூலிக்கப் பட்டுள்ளது.

இப்பசுமைப்பூங்காவின் பொழுதுபோக்கு வசதிகள் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்ட வகையில் ரூ.1.29 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இவ்வருமானத்தின் மூலம் பூங்காவின் பராமரிப்புப்

பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பூங்காவில் கூடுதல் பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 15.5 மீன் தீவன தொழிற்சாலை இயக்கம் :

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், அச்சம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள மீன் தீவன ஆலையினை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இயக்கி வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மீன் தீவனம் அரசு மீன் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் பிப்ரவரி 2023 மாதம் வரை 154.31 மெட்ரிக் டன் மீன் தீவனம் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

## 15.6 நிதி நிலை

2022 – 23 ஆம் நிதியாண்டில் ரூ.788.25 கோடி விற்று முதலில் (Turnover) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது ரூ.10.23 கோடி (தணிக்கை செய்யப்படாதது) இலாபம் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 15.7 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் நிதி பங்களிப்பு

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 2021–22 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட இலாபத்தில் ரூ.2.59 கோடியினை 2022–23ல் மாநில அரசுக்கு பங்கு ஈவுத் தொகையாக செலுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு பிப்ரவரி 2023 வரை ரூ.1.98 கோடியினை தனது பங்களிப்புத் தொகையாக 2022–23 ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 2022–23 ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு ரூ24.25 இலட்சம், பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

## 16. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகம் (TNJFU)

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம், 2012–ன்படி, மாநில அரசு நிதியுதவியுடன் 19.06.2012 அன்று நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளக் கல்லூரிகள் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் மார்ச் 2026 ஆம் ஆண்டு வரை 'A' தர அங்கீகாரம் பெற்றுள்ளது.

### 16.1 தொலையறிவு

"மக்களுக்கு உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதில் மீன்வள அறிவியலை சரியாகப் பயன்படுத்துதல்".

### 16.2 செயலாக்கம்

"தரமான மீன்வள அறிவியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கங்கள் மூலம் சமூக பொறுப்புள்ள மற்றும் தொழில்ரீதியாக திறன்மேம்பட்ட பட்டதாரிகளை உருவாக்கி, மீன்வளத்துறையில் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் நிலையான வளர்ச்சியை அடைதல்".

## 16.3 குறிக்கோள்கள்

- மீன்வள அறிவியலின் பல்வேறு பிரிவுகளில் தொழில் கல்வியை வழங்குதல்
- மீன்வள அறிவியலில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்க திட்டமிட்ட ஆராய்ச்சியை மேற்கொள்ளுதல்.
- மீன்வள அறிவியலில் விரிவாக்க சேவைகளை வழங்குதல்.
- மீன்வளக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை சரியான வழியில் எடுத்துச் சென்று மாநிலத்தின் மேம்பட்ட பொருளாதார வளர்ச்சியில் பங்களித்தல் மற்றும் மீன்வள அறிவியலின் தர மேம்பாட்டிற்கான அளவுகோல்களை நிர்ணயித்தல்.

## 16.4 நிருவாக அமைப்பு

நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகத் தலைமையகத்தில் துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குநர், விரிவாக்கக் கல்வி இயக்குநர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்குநர், நிதி அலுவலர் மற்றும் உடைமை அலுவலர் அலுவலகங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில், 8 உறுப்புக் கல்லூரிகள், 3 இணைத் தொழிற்சார் கல்வி நிலையங்கள் மற்றும் 5 இயக்குனரகங்கள் உள்ளன.

## 16.5 கல்வி

**அட்டவணை.16**

| புலங்கள் | வழங்கப்படும் பாடப் பிரிவுகள் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மீன்வள அறிவியல் | 1. பி.எஃப்.எஸ்ஸி<br>2. எஃப்.எஸ்ஸி (13 பிரிவுகள்)<br>3. பி.ஹெச்.டி (13 பிரிவுகள்) | 3 |
| அடிப்படை அறிவியல் | 1. பி.டெக் (உயிர் தொழில்நுட்பம்)<br>2. பி.பி.ஏ (மீன்வள வணிக மேலாண்மை)<br>3. எம்.பி.ஏ (மீன்வள வணிக மேலாண்மை)<br>4. பி.ஹெச்.டி (உயிர் அறிவியல்) | 3 |
| மீன்வளப் பொறியியல் | 1. பி.டெக் (மீன்வளப் பொறியியல்)<br>2. பி.டெக் (எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்)<br>3. எம்.டெக் (2 பிரிவுகள்) | 1 |
| உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து | பி.டெக் (உணவுத் தொழில்நுட்பம்) | 1 |

* மேலும் பி.வோக், மூன்று பாடப் பிரிவுகளில் மூன்று இணை தொழிற்சார் கல்வி நிலையங்களிலும் வழங்கப்படுகிறது

2022–23 ஆம் ஆண்டில், இளநிலைப் பாடப்பிரிவுகளில் 320 மாணவர்களும், முதுநிலை

பாடப்பிரிவுகளில் 61 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் மொத்தம் 1500 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய 2022ஆம் ஆண்டிற்கான அகில இந்திய நுழைவுத்தேர்வில் 33 மாணவர்கள் தேர்வாகி முதுநிலை மாணவர் சேர்க்கைக்கான தர வரிசைப் பட்டியலில் இடம்பெற்று, பிற மாநிலங்களில் மத்திய மற்றும் மாநில வேளாண்மை பல்கலைக்கழகங்களில் முதுநிலை மற்றும் பிஎச்டி, படிப்புகளில் சேர்க்கை பெற்றுள்ளனர்.

2022-23ஆம் கல்வியாண்டில், பல்கலைக் கழகத்தில் உள்ள அனைத்து இளநிலை பட்டப் படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் 7.5% இடஒதுக்கீட்டின் மூலம் 17 மாணவர்களும், மீனவர் சமுதாய மாணவர்களுக்கான 20% இடஒதுக்கீட்டின் மூலம் பி.எஃப்.எஸ்ஸி. மற்றும் பி.டெக். மீன்வளப் பொறியியல் பிரிவில் 25 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டில், 9 இளநிலை பட்டப் படிப்புகளில் பயின்றுவரும் 570 மாணவிகளில்

31 மாணவிகள் தமிழ்நாடு அரசின் 'புதுமைப் பெண்' திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர்.

### 16.6 நான் முதல்வன்

தமிழ்நாடு அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் 'கல்லூரி கனவுகள்' என்ற தலைப்பில் மாணவர்களுக்கு மீன்வளக் கல்வி, அதன் முக்கியத்துவம் மற்றும் வேலை வாய்ப்பு விவரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, சென்னையில் 25.06.2022 அன்று கண்காட்சி நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களின் கல்வி நிறுவனங்களில் மீன்வளக் கல்வி குறித்து இப்பல்கலைக்கழக ஆசிரியர்கள் விளக்கவுரை வழங்கினர். இதில் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### 16.7 பட்டமளிப்பு

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழா 19.08.2022 அன்று நாகப்பட்டினத்தில் உள்ள பல்கலைக்கழக தலைமையகத்தில் நடைபெற்றது. இந்த பட்டமளிப்பு விழாவில் பல்வேறு பிரிவுகளில் 366 பட்டங்கள் நேரடியாக வழங்கப்பட்டது. மேலும், 48 பட்டதாரிகள் தங்களது பட்டங்களை தபால் மூலம் பெற்றனர். இவ்விழாவில் பல்வேறு பிரிவுகளின் கீழ்

மொத்தம் 19 பட்டதாரிகளுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவானது, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு வருடமும் 50 பதக்கங்கள் கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### 16.8 உருவாக்கப்பட்ட மற்றும் திறந்து வைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள்

இப்பல்கலைக்கழக தலைமையகத்தில் விவசாயிகள் பயிற்சி மையம், சாலை உருவாக்கம் மற்றும் நுழைவாயில் வளைவு, தலைஞாயிறு மீன்வளக் கல்லூரியில் நிருவாகக் கட்டடம் மற்றும் மாணவர்கள் விடுதி மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் சுற்றுச்சுவர் ஆகியவை நபார்டு நிதியுதவியுடன் ரூ.26.09 கோடியில் கட்டப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில நிதி மற்றும் நபார்டு நிதியுதவியுடன் ரூ.13.20 கோடியில் தலைஞாயிறு மீன்வளக் கல்லூரியின் ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கான குடியிருப்பு மற்றும் நாகப்பட்டினம் மீன்வளப் பொறியியல் கல்லூரியின் முதல் தளக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.

2023 ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநில நிதி, நபார்டு மற்றும்

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் ஆகிய நிதியுதவிகளுடன் ரூ.11.67 கோடியில் கட்டப்பட்ட இணைத் தொழிற்சார் மீன்வளத் தொழில்நுட்ப நிலையம், மாதவரம், தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் விடுதி முதல் மற்றும் இரண்டாம் தளம், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தின் அலுவலகம் மற்றும் ஆய்வகம், தூத்துக்குடி மாவட்டத்தில் வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் செவுள் வலை மற்றும் ஆயிரங்கால் தூண்டில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி விசைப்படகு, தூத்துக்குடி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தின் பயிற்சிக் கூடத்துடன் கூடிய ஆய்வகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

### 16.9 ஆராய்ச்சி செயல்பாடுகள்

#### 16.9.1 தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

இப்பல்கலைக்கழகம் 2022–23 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து ரூ.37.84 கோடி நிதியுதவி பெற்று, பின்வரும் 25 ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## அட்டவணை.17

| வ. எண். | நிதி நிறுவனம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை – அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் | 2 | 66.68 |
| 2. | தொழில்முனைவு மேம்பாட்டு நிறுவனம் | 1 | 250.00 |
| 3. | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் – தேசிய புதுமை காலநிலை மீள்திறன் வேளாண்மை திட்டம் | 2 | 68.25 |
| 4. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் – மீன் மரபியல் வள தேசிய பணியகம் | 1 | 52.20 |
| 5. | உயிர் தொழில்நுட்பத் துறை | 1 | 54.00 |
| 6. | தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்–II | 1 | 250.00 |
| 7. | தமிழ்நாடு அரசின் மாநில புதுமைத் திட்டம் | 2 | 577.46 |

| வ. எண். | நிதி நிறுவனம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 8. | தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் | 6 | 882.30 |
| 9. | தேசிய வேளாண்மை மற்றும் கிராம மேம்பாட்டு வங்கி திட்டம் | 1 | 350.00 |
| 10. | தமிழ்நாடு அரசின் மாநில நிதியுதவி | 3 | 917.20 |
| 11. | தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் | 2 | 26.36 |
| 12. | தேசிய கடலோர ஆராய்ச்சி மையம் | 1 | 123.91 |
| 13. | பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம் | 1 | 116.00 |
| 14. | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் | 1 | 50.00 |
| | **மொத்தம்** | **25** | **3784.36** |

### 16.9.2 ஆராய்ச்சி வெளியீடுகள்

இப்பல்கலைக்கழகம் 2022 ஆம் ஆண்டில் 6க்கும் அதிகமாக மதிப்பீடு உடைய 120 ஆய்வுக் கட்டுரைகளை (சர்வதேச இதழ்கள் : 93 மற்றும் தேசிய இதழ்கள் : 27) வெளியிடப்பட்டுள்ளது, இது தேசிய

வேளாண் அறிவியல் கழகத்தின் தரவரிசைக்கு இன்றியமையாத அளவுகோலாகும்.

**16.9.3 காப்புரிமைகள்**

2022–23 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகம் 16 வடிவமைப்பு காப்புரிமைகளை தாக்கல் செய்துள்ளது.

1. மிதிசெயல்பாட்டின் மூலம் இயக்கப்படும் மீன் செதில் நீக்கும் இயந்திரம்
2. மின்சாரத்தில் இயங்கும் பகுதி தானியங்கி உலர் மீன் வெட்டும் இயந்திரம்
3. 'ரிடார்ட்' பொதிகலனில் நண்டு சதைகளை பதப்படுத்துவதற்கு மின்சாரத்தால் இயக்கப்படும் அடுக்கு வகை பேஸ்டுரைசேசன் அமைப்பு
4. மீன் துண்டுகளில் உள்ள நீரை நீக்கும் மின்சார இயந்திரம்
5. மீன் விற்பனை இயந்திரம்
6. நாற்றாங்கால் மீன் வளர்ப்பு முறைக்கான காற்றோட்டம் மற்றும் உணவு அமைப்பு
7. நன்னீர் மீன் வளர்ப்புக்கான கூண்டு
8. ஒருங்கிணைந்த காற்றேற்றிகளுக்கான பல்லிணைப் பெட்டி
9. இறால் நாற்றாங்காலில் குஞ்சுகளை தரம் பிரிப்பான்

10. உறையிடப்பட்ட மீனின் தரத்தை கண்டறிய உதவும் நிறமாறும் உணரிகள்
11. கைக்கு அடக்கமான கலோரி மீட்டர்
12. அயனி நீக்கப்பட்ட நீர் உருவாக்கம்
13. நீர்வாழ் உயிரி அறுவடை இயந்திரம்
14. நீர்வாழ் உயிரியை புது சூழலுக்கு இணங்க வைக்க பயன்படுத்தும் தொட்டி
15. பைசோ எலக்ட்ரிக் காலணிகள்
16. பைசோ எலக்ட்ரிக் ஓடுகள்

### 16.9.4 உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்கள் / கருவிகள்

ஐந்து தொழில்நுட்பங்கள் இந்த ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, பயோஃப்ளோக் மீன்வளர்ப்பு நுட்பத்திற்கான குறைந்த பட்ச வட்ட தொட்டி முன் மாதிரி, மீன் எலும்பு கொலாஜன் பெப்டைடுகளுடன் புரதம் சேர்க்கப்பட்ட உணவு, யுபிஎல்ஸி உபகரணம் பயன்படுத்தி மீன்களில் உள்ள ஃபார்மால்டிஹைடை கணிக்கும் தேர்வு முறை மற்றும் சரிபார்ப்பு முறை, பிசிஆர் மதிப்பீடு மூலம் இறால் ஒவ்வாமை பொருளான ட்ரோபோமையோசினை கண்டறிதல் மற்றும் மீன் சூப் பொடியை சிறு பையில் பேக்கிங் செய்யும் தொழில்நுட்பம்.

இந்த ஆண்டில் ஏழு இயந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, சுருமி உற்பத்திக்காக நீர் நீக்கும் அடுக்கு அமைப்பு, நண்டு சதையை பாஸ்டுரைசேசன் முறையில் ரிடார்ட் பைகளில் நிரப்புவதற்கான பாஸ்டுரைசர் அடுக்கு அமைப்பு, மிதி செயல்பாட்டின் மூலம் இயக்கப்படும் மீன் செதில்களை நீக்குவதற்கான இயந்திரத்தின் வடிவமைப்பு, மீன்சதையை தனியே பிரித்தெடுப்பதற்கான இயந்திரம், மீன் பாப்பிங் இயந்திரம், கணிணி செயலியுடன் சூரியசக்தியில் இயங்கும் தானியங்கும் உணவளிக்கும் இயந்திரம், உறையிடப்பட்ட மீனின் தரத்தைக் கண்டறிய உதவும் நிறம் மாறும் உணரிகள்.

### 16.9.5 தயாரிக்கப்பட்ட பொருட்கள்

இந்த ஆண்டில், 15 தயாரிப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, காலர்பா ரெஸிமோசா எனும் கடற்பாசி சேர்க்கப்பட்ட பாஸ்தா உணவு, பாலாடைக்கட்டி மற்றும் மசாலா சேர்த்த இறால் நொறுவை, தரமான உப்பு மற்றும் மிளகாய் சேர்க்கப்பட்ட இறால், பச்சை மிளகாய் சேர்க்கப்பட்ட காரமான இறால் நொறுவை, தந்தூரி பார்பிக்யூ இறால் நொறுவை, தமிழ்நாடு பாணியில் காரமான இறால் பொடி, புகையால் உலர்த்தப்பட்ட இறால், இறால் மசால் கலவை, கடற்பாசி ஊறுகாய், ஆப்பிள் நத்தை சூப்புப்பொடி, கடற்பாசி ஜாம் , மசாலா இறால் நொறுவை, நீரில் கரையக்கூடிய கைடோசனால்

வலுவூட்டப்பட்ட ஆரோக்கிய கலவை, நீரில் கரையக்கூடிய கைடோசனால் வலுவூட்டப்பட்ட காய்கறி சூப் மற்றும் நீரில் கரையக்கூடிய கைடோசனால் வலுவூட்டப்பட்ட திராட்சைப் பானம்.

### 16.9.6 உருவாக்கப்பட்ட கணிணி செயலிகள்

3 கணிணி செயலிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை, ஸ்மார்ட்டு – செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இணைய செயலி, அக்வாஜெண்ட்– விவசாயி நட்பு மெய்நிகர் உதவியாளர் மற்றும் இறால் பண்ணை கீழ்படிவு கணக்கிடும் செயலி.

### 16.9.7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

2022–2023 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலியாவிலுள்ள கர்டின் பல்கலைக்கழகம் மற்றும் வங்காள விரிகுடா திட்டம் ஆகியவற்றுடன் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், தனியார் தொழில்துறை நிறுவனங்களுடன் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளது.

### 16.9.8 ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் வணிக மயமாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வரும்

"கடல் சார் உணவுப் பொருட்கள் வணிக மையம்" பல்வேறு விதமான கடற்பாசி சார்ந்த அழகு சாதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்கில் ஹெர்பலிஸ் ஹெல்த் கேர் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து சந்தையில் மேற்கண்ட அழகு சாதனப் பொருட்களை அறிமுகம் செய்துள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் மூலம் இருவகையான பன்னடுக்குப் பைகளில் வெப்பப்பதனம் செய்யப்பட்ட மீன் குழம்பு தூத்துக்குடியிலுள்ள பிரிட்டோ கடலுணவு ஏற்றுமதி நிறுவனத்திற்கு வணிகப்படுத்தப்பட்டது. மேலும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வான்டேஜ் நியூட்ரிமென்ட்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஐந்து வகையான மணங்களுடன், உலர்த்தப்பட்ட இறால் வணிகமயமாக்கப்பட்டுள்ளது. இறால் தீவன உருவாக்கம் குறித்த தொழில்நுட்பம் சி.எம்.ஆர் ஃபீட்ஸ் மற்றும் சப்ளிமெண்ட்ஸ், சென்னை நிறுவனத்திற்கு வணிக மயமாக்கப்பட்டுள்ளது.

## 16.10 முக்கிய நிகழ்வுகள்

### 16.10.1 இந்திய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கு

தேசிய அளவிலான 12வது 'இந்திய மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு கருத்தரங்கு' இப்பல்கலைக் கழத்தினால் 2022 ஆம் வருடம், மே 5 முதல் 7 வரை

சென்னையில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 2000 ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர், 900 ஆராய்ச்சி கட்டுரைகள் வழங்கப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

### 16.10.2 தேசிய வேளாண் அறிவியல் தமிழ் மாநாடு

இப்பல்கலைக்கழகம் புதுதில்லியில் உள்ள வேளாண் அறிவியல் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து வேளாண் அறிவியல் தமிழ் குறித்த தேசிய மாநாட்டை 25 முதல் 26 பிப்ரவரி 2023 வரை, இரண்டு நாட்கள் நாகப்பட்டினத்தில் பல்கலைக்கழக மாநாடு கூடத்தில் நடத்தியது. இதில் 576 தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டது. மீன்வளம், கால்நடை அறிவியல், வேளாண்மையியல் சார்பு கல்லூரிகள் மற்றும் கல்வி நிலையங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## 16.11 விரிவாக்க செயல்பாடுகள்

### 16.11.1 விவசாயிகள் மற்றும் இதரப் பயனாளிகளுக்காக உருவாக்கப்பட்ட தொழில் காப்பகங்கள்

மறுசுழற்சி மீன்வளர்ப்பு அமைப்பு, இறால் நுண்குஞ்சுகள் வளர்ப்பு அலகு, கடல் மீன் நாற்றங்கால் அலகு, மீன் மற்றும் இறால் குளங்கள், தீவன ஆலை, நீர்வாழ் வண்ணமீன் வானவில் பேரங்காடி, நீர்வாழ் வானவில் தொழில்நுட்ப பூங்கா, உள்நாட்டு

கூண்டுகளில் மீன் வளர்ப்பு அலகு, கடலில் கூண்டுகளில் மீன் வளர்ப்பு அலகு, தொடர் தொட்டிகளில் மீன்வளர்ப்பு போன்றவை இப்பல்கலைக் கழகத்தின் கல்லூரிகள் மற்றும் மையங்களில் உள்ளன. இவற்றை மீன் மற்றும் இறால் பண்ணையாளர்கள், கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்கள் மற்றும் பிற பயனாளிகள் பயன்பெறும் நோக்கில் குத்தகைக்கு விடப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன நிதியுதவி திட்டத்தில், 27 காப்பக பயனாளிகள் பதிவு செய்து, தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் உள்ள தொழில் காப்பக வசதிகளைப் பயன்படுத்தி வணிகம் செய்து வருகின்றன

### 16.11.2 ஆய்வகங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள்

மீன் வளர்ப்போர் மற்றும் கடல் உணவு பதப்படுத்தும் தனியார் நிறுவனங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இப்பல்கலைக்கழகத்தில் நான்கு ஆய்வகங்கள் நீர்த் தர பரிசோதனை, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை, மீன் தீவனத்தின் தரம் மற்றும் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களின் தரம் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதற்காக செயல்படுகின்றன. மாதவரத்தில் மாநில அளவிலான நீர்வாழ் உயிரினங்களின் சுகாதார மேலாண்மைக்கான ஆய்வகம், தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும்

ஆராய்ச்சி நிலையத்தில் நீர்வாழ் உயிரினங்களின் சுகாதார மேலாண்மைக்கான ஆய்வகம், தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மீன்தர கண்காணிப்பு மற்றும் சான்றிதழுக்கான ஆய்வகம், மீன்வள முதுகலை பட்ட மேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி வளாகம் சென்னையில் உள்ள மாநில அளவிலான மீன் தீவன சோதனை மற்றும் தரச்சான்றிதழ் பரிந்துரை ஆய்வகம் இந்த சேவைகளை செய்து வருகிறது.

### 16.11.3 மீனவர்களுக்கான பயிற்சிகள்

இப்பல்கலைக்கழகத்தால் தூத்துக்குடியில் 'ஆழ்கடல் மீன்பிடி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கப்பல் வடிவமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. 2022-23ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல், படகுகள் வழிசெலுத்துதல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் நடத்தப்பட்ட பயிற்சிகளின் மூலம் 150 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

### 16.11.4 மீன்வளர்ப்போர் மற்றும் தொழில் முனைவோர்களுக்காக வழங்கப்படும் சேவைகள்

மீன்வளர்ப்பு பற்றிய நடப்பு நிகழ்வுகளை புரிந்துகொள்வதற்காக மீன் வளர்ப்போர் மற்றும்

தொழில்முனைவோர்களுக்கு இப்பல்கலைக்கழகத்தால் 'மீன்வளச் சுடர்' என்ற காலாண்டு தமிழ் இதழ் பிரசுரிக்கப்படுகிறது.

மீன் வளர்ப்பில் மற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு மீன் விவசாயிகளின் வெற்றிக் கதைகள் வெளியிடப்படுகின்றன. பல்கலைக் கழகத்தில் அனைத்து உறுப்பு மையங்களில் இணையவழி பயிற்சி மற்றும் கருத்தரங்கு உள்ளிட்ட 78 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, 5224 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். வேளாண் அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம் மூலமாக வேளாண்மை மற்றும் கால்நடை பாடப் பிரிவுகளில் 71 பயிற்சிகள் நடத்தப்பட்டு 3819 பயனாளிகள் பயனடைந்தனர்.

## 17. எதிர்காலத் திட்டங்கள்

மீன்வளப் பிரிவின் விரிவான வளர்ச்சிக்கான அரசின் எதிர்காலத் திட்டங்கள்:

- சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் மாநில அரசு மீனவர்களின் நலனை உறுதி செய்யும்.
- அதிநவீனத் தகவல் தொடர்பு சாதனங்களை தொடர்ந்து மீனவர்களுக்கு வழங்குவதன் மூலம், மீன்பிடிக்கும்போது அவர்களது பாதுகாப்பினை உறுதி செய்யும்.

- கடல் மீன்வளத்தின் மீதான அழுத்தத்தை குறைக்கும் நோக்குடன், கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்ப்பு போன்ற கடல் வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகள் மாற்று வாழ்வாதார வாய்ப்பாக ஊக்குவிக்கப்படும்.
- கடற்பாசி உற்பத்தி மற்றும் கடற்பாசியிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்கள் உற்பத்தி செய்திட ஏதுவாக பிரத்யேக உட்கட்டமைப்பு வசதிகளை அரசு உருவாக்கும்.
- மீன்களை சுகாதாரமாக கையாலுதல், தொடர் குளிர்காப்பினை பேணுதல், மதிப்பு கூட்டுதல், சிறந்த மீன்வளர்ப்பு முறைகள் போன்றவற்றில் மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, திறன் மேம்பாடு அடைய வழிவகை செய்யப்படும்.
- கடலோர மீன்வளர்ப்பு நடவடிக்கைகளான நண்டு கொழுக்க வைத்தல், குளங்களில் கடல் மீன் வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் நண்டு வளர்த்தல் போன்றவை ஊக்குவிக்கப்பட உள்ளன.
- மீன் வளர்ப்பு, கடல்வாழ் உயிரின வளர்ப்பு, மீன் பதப்படுத்துதல் போன்றவற்றில் டாக்டர்.ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை

மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் பயன்பெறும் வகையில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

- கரையோர தரிசு நிலங்களை முறையாக பயன்படுத்தி, கடலோர மீன் வளர்ப்பின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 'நில குத்தகை கொள்கை' உருவாக்கப்படும்.
- மீன்களை சுகாதாரமாக கையாளுதல், தரம் உறுதி செய்தல் மற்றும் மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையை பெறுதல் ஆகியவற்றை உறுதி செய்வதற்காக, உலகத் தரம் வாய்ந்த மீன்பிடித் துறைமுகங்கள், கடற்கரை வசதிகள் மற்றும் தொடர் குளிர்காப்பு வசதிகள் தமிழ்நாட்டின் கடற்கரை முழுவதும் ஏற்படுத்தப்படும்.
- சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை திறம்பட செயல்படுத்துவதன் மூலம் மீன்வள ஆதாரங்களை பாதுகாத்து நிலையான மேலாண்மை செய்யப்படும்.
- மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்திட அரசு உறுதியாக உள்ளது. இதற்காக மீன்குஞ்சு உற்பத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், நவீன தொழில்நுட்பங்களை

அறிமுகப்படுத்துதல், அனைத்து நீர்வள ஆதாரங்களையும் மீன் வளர்ப்புக்கு திறம்படப் பயன்படுத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

- மாநிலத்தின் நாட்டின மீன் வகைகளைப் பாதுகாக்க முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. ஆறுகள் மற்றும் பிற இயற்கை நீர்நிலைகளில் நாட்டின மீன் குஞ்சுகளை இருப்பு செய்வதன் மூலம் அவற்றின் இருப்பு அதிகரிக்கப்படும்.
- மீன் சந்தைப்படுத்துதலை திறம்பட மேற்கொள்ளவும், உள்நாட்டு மீன்களுக்கு சிறந்த விலையை பெற்றிடவும், குழு அடிப்படையிலான மீன்வளர்ப்பு ஊக்குவிக்கப்படும்.
- செயற்கை பவளப்பாறைகள் நிறுவுதல் மற்றும் கடலில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் போன்ற மீன்வளப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் பெருமளவில் மேற்கொள்ளப்படும்.

## 18. நிதி ஒதுக்கீடு (2023-24)

2023-2024 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ. 1,358.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 618.41 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.739.85 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

## 19. நிறைவுரை

மீனவர்களின் நலனைப் பாதுகாப்பதுடன், கடல், உவர்நீர் மற்றும் உள்நாட்டு மீன்வளப்பிரிவுகளில் இருந்து நீடித்த முறையில் மீன் உற்பத்தியை உறுதி செய்வதற்கான மீன்வள ஆதாரங்களை உருவாக்குவதற்கு அரசு அதிமுக்கியத்துவம் அளிக்கிறது. பாக் வளைகுடாவின் பாரம்பரிய மீன்பிடி பகுதிகளில் நமது மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமையை மீட்டெடுப்பது அரசின் முதன்மையான குறிக்கோள்களுள் ஒன்றாக உள்ளது. பாக் வளைகுடா பகுதியில் தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி உபகரணங்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு காண ஒன்றிய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மீன்வளப்பிரிவில் நிரந்தர வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு, கடற்பாசி வளர்ப்பு மற்றும் கடல் கூண்டுகளில் மீன் வளர்ப்பு போன்ற மீனவர்களுக்கான மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்த தொடங்கியுள்ளது. அதேசமயம், பாக் வளைகுடா மாவட்டங்கள் மற்றும் பிற கடலோர மாவட்டங்களில், மீன்களுக்கு உணவு கிடைக்கும் இடமாகவும், இனப்பெருக்கம் செய்வதற்கு உகந்த

இடமாகவும் திகழும் செயற்கைப் பவளப்பாறைகளை பெருமளவில் நிறுவுவதற்கான அறிவிப்பினை அரசு வெளியிட்டுள்ளது. இதன் மூலம், கரையோரப் பகுதிகளில் மீன்வளம் பெருமளவில் அதிகரித்து, நாட்டுப்படகு மீனவர்கள் தங்கள் மீனவ கிராமங்களுக்கு அருகிலேயே போதிய அளவில் மீன்களை பெறுவதற்கு வாய்ப்பாக அமையும்.

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரிக்க, அனைத்து பொது நீர்நிலைகளிலும் தரமான மீன் விரலிகளை இருப்பு செய்திடும் வகையில், உள்நாட்டு மீன் குஞ்சு உற்பத்திக்கும் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைப்பதற்கான, அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. உள்நாட்டு மீன்வளர்ப்பில், அதிகரித்து வரும், மரபணு மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா (GIFT) போன்ற வேகமாக வளரும் மீன் குஞ்சுகளுக்கான தேவையை பூர்த்தி செய்வதிலும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. மீன்வளப்பிரிவில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை மீன்வளர்ப்போருக்கு கொண்டு செல்வதற்காக, நீர் மறு சுழற்சிமுறை மீன்வளர்ப்பு (RAS) மற்றும் உயிர்க்கூழ்ம (Biofloc) மீன் வளர்ப்பு போன்றவற்றிற்கு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டின் கடல் உணவு ஏற்றுமதியை இரட்டிப்பாக்கும் நோக்குடன், கடலோர தரிசு நிலங்களை இறால் வளர்ப்புக்கு பயன்படுத்தும் அதே வேளையில், உவர்நீர் மீன் வளர்ப்பை பெரிய அளவில் விரிவுபடுத்துவதற்கான தொலைநோக்குப் பார்வையை அரசு கொண்டுள்ளது. மீனவர்கள் தங்கள் மீன்பிடிப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன் பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்குத் தேவையான தொடர் குளிர்காப்பு வசதிகள் மற்றும் பிற கடலோர உட்கட்டமைப்பு வசதிகள், நன்கு திட்டமிடப்பட்டு முறையாக செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக, அரசின் தலைசிறந்த எதிர்காலத் திட்டமிடல் மற்றும் திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள துல்லியம் ஆகியன, மீன்வளப்பிரிவில் அரசின் தொலைநோக்கு வளர்ச்சி இலக்குகளை விரைவில் அடைய வழிவகுக்கும்.

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**
**மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்**
**கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்**

# பிற்சேர்க்கை

# 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| திட்டம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | (ரூ. இலட்சத்தில்) |
| ஊதியம் | 8,792.51 | 0.00 | 0.00 | 8,792.51 |
| நிவாரணத் திட்டங்கள்(மாநில நிதி) | 23,665.40 | 0.00 | 0.00 | 23,665.40 |
| பிற திட்டங்கள் (மாநில மற்றும் ஒன்றிய அரசு நிதியுதவி) | 4,456.31 | 0.00 | 0.00 | 4,456.31 |
| நீர்வள நிலவளத்திட்டம் (உலக வங்கி திட்டம்) | 326.19 | 0.00 | 0.00 | 326.19 |
| பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டம்(ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்களிப்புத் திட்டம்) | 19,381.81 | 0.00 | 0.00 | 19,381.81 |
| தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் | 0.77 | 0.00 | 0.00 | 0.77 |
| தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் | 5,218.05 | 0.00 | 0.00 | 5,218.05 |
| உட்கட்டமைப்பு (மாநில நிதி) | 0.00 | 800.03 | 0.00 | 800.03 |
| உட்கட்டமைப்பு – மீன்வள உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்களிப்புத் திட்டம்) | 0.00 | 36,185.01 | 0.00 | 36,185.01 |
| உட்கட்டமைப்பு – நபார்டு வங்கியின் நிதியுதவி | 0.00 | 37,000.01 | 0.00 | 37,000.01 |
| **மொத்தம்** | **61,841.04** | **73,985.05** | **0.00** | **1,35,826.09** |